
www.padippakam.com

3-4,5
மடங்கல் (மே - ஆக 1999)
விலை : உ.ரு. 5.00

# உழைக்கும் மக்கள் தமிழகம்

## காஷ்மீர் மக்களுக்குத் தமிழகம் இழைத்த இரண்டாவது துரோகம்!




## சாதி, மதவெறியைத் தூண்டி வளர்க்கும் சமத்துவபுர நாயகர்.

தமிழக அரசியல் பண்பாட்டு விடுதலை மாத இதழ்

படிப்பகம்

www.padippakam.com

எம்மா ஒதுங்கிநில்லு ஓட்டுக்காரன் வாறான்...
ஒண்ணா சேர்ந்து நம்மை குழியில் தள்ளப்போறான்..



கொள்கை எல்லாம் போச்சே... குரங்கு
குல்லா கதை ஆச்சே... (அவனுக்கு)
கொள்கை என்ன மண்ணாங்கட்டி
தூக்குடா கொடியைக்கட்டி...
கொள்கை எல்லாம் போச்சே... குரங்கு
குல்லா கதை ஆச்சே...
பாரதமே வேணாமுன்னு இளிச்சிக்கிட்டு சொன்னனானே...
பாரதத்தை தூக்கிநிறுத்தும் தேர்தலில் நிப்பானே... (எம்மா)

(அ)

# எம்மா ஒதுங்கிநில்லு

பாஜாவுக்கு கூஜா தூக்கும் அவன் பேரு பெரியாரிஸ்டு...
பூனூல் போட்டுன்னு விடுதலை பேசும் அவன்பேரு கம்னியூஸ்டு...
புதுசா ஒரு இந்துக்காரன் அவன்பேரு புத்திஸ்டு...
பாப்பாத்திக்குப் பல்லைக்காட்டும் அவன்பேரு அம்பேத்கரிஸ்டு...
(த்தூ... அவனா அம்பேத்கரிஸ்டு?) - (எம்மா)

(ஆ)

முன்னேற்றத்திற்கு ரெண்டு கட்சி தமிழ் மாநிலத்துக்கொரு கட்சி...
மறுமலர்ச்சிக்கு ஒருகட்சி பாட்டாளிக்கு இன்னொரு கட்சி...
புதுசுக்கு ஒருகட்சி 'புரட்சிக்கு இன்னொரு கட்சி... இப்போ
எல்லா கட்சியும் இளிச்சிமுடிச்சி இன்னும் இளிக்கவருது எத்தனைக்கட்சி...

எம்மா ஒதுங்கிநில்லு ஓட்டுக்காரன் வாறான்... நம்மை
ஒண்ணா சேர்த்து தலையில் மொளகா(ய்) அரைக்கப் போறான்...!

- இந்தப்பாடல் 'சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டில்' தோழர் ஒப்பாரியால் பாடப்பட்டது. பாடிவிட்டு மேடையிலிருந்து கீழிறங்கிய தோழரை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் சூழ்ந்து கொண்டு, அதெப்படி இப்படியெல்லாம் பாடலாம் - என்பதாக மிர ட்டி அடிப்பதற்காகச் சூழ்ந்து கொண்டனர்.

சூழ்ந்து கொண்டவர்களைத் த.ஒ.வி.இ. தோழர்களும், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் திருமாவளவன் அவர்களும் விலக்கிவிட்டு அமைதிப்படுத்தினர்.

இருப்பினும் - இரா. திருமாவளவன் அவர்கள் தாம் பேசுகிறபோது - தேர்தல் பாதை நடைமுறை உத்தியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது என்பதாகக்கூறி, தேர்தல் மறுப்புக் கருத்தைக் கிண்டல் செய்து பேசினார்.

## சாதி, மத மறுப்புச் சிந்தனையுள்ள மணமகன் தேவை

பெயர் : அருள் செல்வி
அகவை : 27
கல்வி : 5ஆம் வகுப்பு

தொடர்புக்கு : இலக்கியன்
16, ராசாத் தெரு,
பெரம்பூர், சென்னை - 11.

## உழைக்கும் மக்கள் தமிழகம் - ஓர் அறிவிப்பு!

உழைக்கும் மக்கள் விடுதலைக்கென ஓர் இதழ் நடத்தப்பெறுவது என்பது எவ்வளவு கடுமையானது என்பதை வாசகர்கள் அறிவர்.

கடுமையான பொருள் நெருக்கடியால் மக்கள் தமிழகம் வெளிவருவதில் ஏற்பட்டிருக்கிற சுணக்கத்தைக் கருத்தில் கொண்டு, இதழைத் தொடர்ந்து கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பெறுகின்றன.

நிலை சரிசெய்யப்படுகிற வரையில் இதழ் இரண்டு மூன்று மாதங்கள் நிறுத்தி வைக்கப் பெறுகிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# சாதி, மதவெறியைத் தூண்டி வளர்க்கும் சமத்துவபுர நாயகர்



பொழுதெல்லாம், நாளெல்லாம் புரட்சி பேசுகிற இக்கால புரட்சித் தமிழர்கள் பலர் தங்கள் வீட்டுத் திருமணம் என்று வந்துவிட்டால் எப்படி அப்படியே அடங்கி சாதி நெறிப்படி, சடங்குகளோடு இயைந்து போய்விடுகிறார்களோ அப்படி அரசியல்வாதிகள் சாதிவெறி வெளிப்பட நடக்கிற காலம் தேர்தல் காலம்.

மற்ற நேரங்களில் நடக்கிற சாதிக்கலவரங்களில் ஆதிக்கச் சாதியர் பக்கமிருந்து தாமும் தாக்கிவிட்டு, புண்ணுக்குப் புனுகு பூசுபவர்களாய் நாடகம் நடத்துவதே ஆட்சியாளர்களின் வழக்கமாகி விட்டது.

தேர்தல் காலங்களில் சொல்லவே வேண்டாம் எந்தத் தொகுதியில் யாரை நிறுத்துவது என்பதிலிருந்து அனைத்தும் சாதியே. இந்தச் சாதிக்காரரை வேட்பாளராக நிறுத்தி விட்டால் மற்ற சாதியர் வாக்கை எப்படிப் பெறுவது. பெரும்பான்மை எண்ணிக்கையுள்ள சாதியர்க்கு ஏதாவது சலுகை வழங்குவது - அல்லது பெரும்பான்மை எண்ணிக்கைச் சாதியின் மாற்றுச் சாதியர்க்கு இன்னல் விளைவிப்பது - எல்லாமே சாதிவெறி உணர்வாய் தேர்தல் காலத்தில் தாண்டவ மாடுகின்றது.

இத்தகைய போக்கே இன்றைக்கு மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த நெல்லைப் பேரணியின் மீதான போலிசின் வெறித்தாக்குதல்.

ஒருபுறம் சமத்துவபுரம் கட்டிக்கொண்டு அங்கு சாதி வேறுபாடே இல்லை என்று காட்டித் தமிழகமே சமத்துவ புரங்களாக மாறவேண்டும் என்று பேசுகிற கருணாநிதியின் இன்னொரு முகம்தான் சாதிவெறியாட்டம் போடுவது.

போலீசு ரவுடிகளைக் கையில் வைத்துக்கொண்டு அவர் ஆடுகிற வெறியாட்டம் அவருக்குக் காலத்தாலும் அழிந்து போகாத கரையை ஏற்படுத்தியுள்ளது.

ஜெயலலிதாவுக்குத் தென்மாவட்ட முக்குலத்தோரின் வாக்கு முழுமையாய்ப் போகப்போகிறது என்பதை உடைக்கக் கருணாநிதி எடுத்த சாதிவெறி நடவடிக்கைதான் நெல்லையில் போலீசின் வெறியாட்டம்.

கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் கட்சியினர் மீது கடும் தாக்குதல் நடந்தாலோ அல்லது கிருஷ்ணசாமியையே கடுமையாகத் தாக்கிவிட்டாலோ தனக்கு முக்குலத்தோரின் ஆதரவு கிடைத்திடும் என்று சாதிவெறியில் கணக்கெழுதித் தாக்குதலை நடத்திப் பார்த்திருக்கிறார் கருணாநிதி.

எப்படியும், கிருஷ்ணசாமியின் வளர்ச்சி யாலும் பிற காரணங்களாலும் தமக்குத் தென்மாவட்டத் தாழ்த்தப்பட்டோரின்


26

உழைக்கும்

மக்கள் தமிழகம்



தொடர்புக்கு :
183, வெங்கட்டரங்கம் தெரு,
சென்னை – 600 005.



இதழ் குழு

பொழிலன்

இளங்கோவன்

செல்வி

செந்தழல்

மார்க்சு வேனில்




படிப்பகம்

வாக்குகள் கிடைப்பது பெருமளவு குறைந்துவிடும் என்று கருதிய கருணாநிதி, கிருஷ்ணசாமியைத் தாக்குவதால் தமக்கு முக்குலத்தோர் ஒப்போலை கிடைக்க வழியமைந்துவிடும் என்கிற நோக்கி லேயே திட்டமிட்டுப் போலீசு வெறியர்களைக் கொண்டு தாக்கியிருக்கிறார் கருணாநிதி.

ஊர்வலத்தினர் கலைந்து போகவேண்டும் எனும் எண்ணம் இருந்தால் அவர்கள் கலைந்துபோக வேண்டுமான முயற்சியில் கண்ணீர்ப் புகைகுண்டு, தண்ணீர்ப் பாய்ச்சல் என்று பலவழிகளை வைத்திருக்கிற போலீஸ் குண்டர்கள் அதையெல்லாம் பின்பற்றாமல் ஆறடித்தடிகளைக்கொண்டு அப்பாவி ஏழை எளிய மக்களை வெறிகொண்டு தாக்கி விரட்டி அடித்ததோடு மட்டுமல்லாமல், தாமிரபரணி ஆற்றில் குதித்துத் தப்பிக்க எண்ணியவர்களுள் நீச்சல் தெரியாமல் தத்தளித்தவர்களையெல்லாம் அடித்துத்தாக்கி வெறியாட்டம் ஆடிக்கலைத்த போலீசின் தாக்குதலை ஒருவரிகூட கருணாநிதி கண்டித்துவிடவில்லை. செத்துமடிந்த ஏழை மக்களின் கண்ணீரைத் துடைக்க ஆறுதலாய் ஒரு சொல்கூட சொல்லிவிடவில்லை.

மாறாய் இந்தக் கொடிய சம்பவத்தின் காரணத்தால் மாவட்ட ஆட்சியரையும், போலீசு கண்காணிப்பாளரையும் மாற்ற வேண்டும் எனும் கோரிக்கையை கருணாநிதி முற்றிலும் சாதிவெறி உணர்வோடேயே அணுகியிருக்கிறார்.

"அவர்களை மாற்றினால் மிகவும் பிற்படுத்தப் பட்டவர்கள் எதிர்த்துக் கோஷமிடுவார்கள்" - என்கிற கருணாநிதியின் சாதிவெறித்தனத்தை உண்மை நெஞ்சினர் கண்டிக்காமல் இருந்திட முடியாது.

திராவிட இயக்கவழித் தோன்றலாய்த் தன்னை ஒருபுறம் காட்டிக்கொண்டு - இன்னொரு பக்கம் சாதி வெறியராய் ஆட்டமிடுகிற கருணாநிதிக்கு இவைமட்டுமே முகங்களில்லை.

அவரின் இன்னும் பல முகங்கள் எல்லாம் வைதிகப் பார்ப்பனன் ஒருவனின் முழுப்பார்ப் பனியச் செயலை ஒத்தவை.

தமிழ் வாழ்க - என்று உதட்டளவில் பேசிக்கொண்டு - மறுபக்கம் ஆங்கிலத்தை உச்சுமுகர்ந்து வரவேற்கிற முகம்.

பிஞ்சு உள்ளங்களில் ஆங்கில நச்சு விதைப் பரவக்கூடாது தாய்மொழிக் கல்விதான் தேவை என்று உயிரைக் கொடுத்துப் போராட முனைந்த அறிஞர்களையெல்லாம் அடக்கிவிட்டு - எப்படி நடந்தாலும் தான் ஆங்கிலக் கல்விக்கே பாய்விரிப்பேன் என்கிற கருணாநிதியின் இந்தப் போக்கை எப்படி தமிழர் நலனுக்கானது என்று கூறுவது.

ஒருபுறம் காய்தேமில்லத்துக்கு விழா. இன்னொருபுறம் சிறுபான்மை இசுலாமியர்களை ஓடஓட விரட்டித் தாக்கி, துப்பாக்கியால் சுட்டுக் கொலைவெறியாட்டம் ஆடி, இசுலாமியர் தம் அடையாளங்களை அணிந்து கொள்ளவே அச்சப்படுகிற அளவுக்கு அவர்களை மிரட்டிக் குண்டர் சட்டம் போட்டு அவர்களைத் தனிமைப் படுத்தி வாழவைப்பது, போலிசைக்கொண்டு மிரட்டுவது என்று இந்துத்துவ வெறிகொண்டு செயற்படுவதுதானே இந்தக் கருணாநிதியின் இன்னொரு முகம்.

(மத அடையாளங்கள் அணிந்துகொள்வதை நாமும் மறுத்தாலும் ஒரு குறிப்பிட்ட மதத்தினர் மட்டும் அணிந்து கொள்ள அச்சப்படுத்தப்படுகிற போக்கில் ஆதிக்க மதவெறிக்கான ஆதரவை நாம் கண்டிக்கவே செய்கிறோம்)

தன் தொண்டன் பொட்டு வைத்துக் கொண்டதைப் பார்த்துப் பகடி பேசிய பகுத்தறி வாளர்தானே இந்த மஞ்சள் துண்டு மகிமையாளர்.

ஆனால் இப்போது - பொட்டு வைத்த (பா.ஜ.க.) முகங்களுடன் கூடிக் குலாவுவதோடு - அவர்களின் இந்துத்துவ வெறிக்குச் சாமரம் வீசிக் கொண்டிருக்கும் கருணாநிதியின் இந்து முகம் கொடுமையான மதவெறி முகமாகும்.

பெரியாரிய சிந்தனைகளைப் படித்துக் கொண்டிருந்த தி.மு.க. தொண்டன் இன்றைக்கு, பிள்ளையார் கோயிலை அல்லவா, பா.ஜ.க.வின ரோடு சேர்ந்ததால் சுற்றத் தொடங்கிவிட்டான்.

இத்தனைக்கும் காரணமே கருணாநிதியின் சந்தர்ப்பவாத - பதவி சுகத்திற்கான ஆதிக்கவெறி போக்குகள்தாமே.

மதக் கலவரங்களை நடத்துவதால்தான் இந்துத்துவ உணர்வையும், அதன்மூலம் இந்திய வெறியையும் கட்டிக்காக்க முடியும் என்கிற திட்டத்தின்கீழ்த் தொடங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ்., இன்றைக்குச் சாதிக் கலவரங்களையும் அல்லவா சர்வ சாதாரணமாகத் தூண்டிவிடுகின்றது.

பார்ப்பன எதிர்ப்பு பேசிய பாட்டாளியர் களெல்லாம் **இராம தாசர்களாகவும், ஏழு மலையான்களாகவும்** மாறிப்போய் பாரதீய சனதாவுடன் சேர்ந்துகொண்டு - இன்றைய பார்ப்பன இந்துமதக் கள்ளியைச் சிற்றூர்கள் வரைக்குமல்லவா வந்து விதைத்திருக்கின்றனர்.

அந்த விளைச்சலை அறுத்தெறிகிற திறனற்ற திராவிடத்தின் இரட்டைக் குழல் துப்பாக்கிகள் இன்றைக்குப் பார்ப்பனத்தியின் முந்தானை களைப் பிடித்துக்கொண்டு ஆளுக்கொரு பக்கம் அதன் ஊதுகுழல்களாக மாறிப்போய்க் கிடக் கின்றனர்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

'பிராமணரல்லாதார் இயக்கமாய்'த் தொடங்கிய இயக்கத்தினர் திராவிடர்களாய் மாறிய பிறகு - இன்றைக்கு அப்பார்ப்பனியத்திற்கே சாமரம் வீசும் கூத்தை நாம் எப்படி கண்டிக்காமல் இருக்க முடியும்.

தமிழக மக்களைச் சாதியால், மதத்தால் கூறுபோட்டு, வெறியூட்டிக் கொலைவெறி யாட்டம் போடும் இந்த ஓநாய்களை நாம் எப்போது இனங்காணப் போகிறோம்.

நம் மின் போர்ப்பறை இவர்களின் ஆணவங் களை அறுத்தெரியப் போவது எப்போது?

விழித்தெழ வேண்டாமா?

நாம் விழித்தெழுந்து இச்சாதி மதவெறியர்க் கான இச்சமூக அமைப்பை மாற்றுவதற்குப் போராடாமல் போனால் - நாமும் அவர்களின் பார்ப்பனிய வலைப்பின்னலுக்குள் அல்லவா அடங்கிப் போவோம்.

அப்படிப் போனவர்களின் தலை(வர்)களில் இன்றைக்குப் பூணூல் கிரீடங்கள் ஏறி இருக்கலாம். ஆனால் - அடித்தட்டு மக்களின் வாழ்க்கை சாதிவெறிக்கு, மதவெறிக்கு ஒடுங்கிய மூள் வாழ்க்கையாக அல்லவா நசுங்கிக் கொண்டிருக் கிறது.

இந்தியப் பார்ப்பனியக் கட்டமைப்புக்குத் துணையாய்ப் போகும் இந்த - சாதி மத வெறியர் களை விரட்டி அடிக்க ஒடுக்கப்பட்ட மக்களே நாம் அணிதிரள்வோம்!

ஆதிக்க வெறியை அழித்திடுவோம்!

அடிமை விலங்கை உடைத்திடுவோம்!!

## கீழாநெல்லி

தமிழ்ச் சித்தர்களையும், தமிழக மக்களையும் ஏமாற்றியது சென்னைப் பல்கலைக் கழகம்.

கடந்த சூலை 4-ம் நாள்தான் இந்த ஏமாற்றுத்தனம் நடந்தது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் பழமை மருத்துவமான சித்த மருத்துவத்தின் கண்டுபிடிப்பை உலகக்கொள்ளையர்களிடம் விற்றுவிட்ட ஏமாளித்தனம்தான் அது.

கீழாநெல்லி..

இது ஒரு கல்ப மூலிகை.

இம்மூலிகையின் பயன் அறிந்த சித்தர்கள் கொடிய மஞ்சட்காமாலை நோய்க்கு அருமருந்தாய் அதை அளித்து வந்தார்கள்.

ஆங்கில மருத்துவத்தில் தீர்க்க முடியாத காமாலை நோய்க்கான அருமருந்தாக அது இருந்தது. ஆண்டாண்டு காலமாய் தமிழ் மருத்துவர்களின் பயன்பாட்டிலிருந்த இந்த அரிய மருந்தும் இன்றைக்கு ஆங்கில மருத்துவக் கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

'ஃபைட்டோ பார்ம்' என்கிற இங்கிலாந்து மருந்து நிறுவனத்திடம் சென்னைப் பல்கலைக்கழகம் இந்த மருந்தின் செயல்முறையை பத்தே இலட்சத்துக்கு விற்றுவிட்டது.

200 மில்லி கிராம் எடையில் மூன்று வேலை சாப்பிடக்கூடிய நிலையில் உருவாக்கப்படும் இந்த மாத்திரைகள் ஒரே நாளில் தமிழக அளவில் விற்கிற தொகையே பத்து இலட்சத்துக்கும் அதிகமாக இருக்கிற சூழலில், இந்த அரிய மருந்தின் மருத்துவ நுணுக்கத்தையே பத்து இலட்சத்துக்கு விற்று ஏமாந்து போயிருக்கிறது சென்னைப் பல்கலைக் கழகம்.

உலகம் முழுக்க இந்த மருந்து விற்கப்படுகிற நிலையில் நாளொன்றுக்கு பத்துக்கோடிக்கும் மேலான இலாபத்தையே அது ஈட்டிவிட முடியும்.

மேலும் தடுப்பூசி என்கிற பெயரில் இன்றைக்குப் போடப்படுகிற ஹெபிடைட் பி என்கிற நோய்க்கான தடுப்பூசி முழுக்க முழுக்கக் கீழாநெல்லியைக் கொண்டதே. அந்த ஊசி ஒன்றின் விலை ரூ. 300/- என்கிறவகையில் அடிக்கப்படும் கொள்ளைக்கு அளவே இல்லை. அந்த நிறுவனத்தின் இம்மருந்து உற்பத்தியை இந்தியா முழுக்க விற்கிற உரிமையை 'ராலீப் இந்தியா' மருந்து நிறுவனம் என்கிற மார்வாடி நிறுவனமே பெற்றுக் கோடிக்கோடியாய்க் கொள்ளையடிக்க அணிசேர்ந்திருக்கின்றது.

ஆயிரக்கணக்கான ஆண்டாய்க் குடும்பம் குடும்பமாய்ப் பயன்படுத்தி வந்த நம் தமிழ் மருத்துவக் குடும்பங்களையெல்லாம் ஏமாற்றிவிட்டுக் கீழாநெல்லியை மேலை நாடுகளுக்கு விற்றுவிட்ட இந்த மேதாவிகளை என்ன என்பது?

எப்படியோ தமிழனின் மருத்துவம்கூட தமிழனுக்குச் சொந்தமில்லாமல் ஆக்கப்பட்டுவிட்டது.

தமிழக அளவில் நாட்டுடைமையாக்கப்படுகிற நூல்களுக்குக்கூட பரிவுத்தொகை அளிக்கப்படுகிற தமிழகத்தில், தமிழ் மண்ணின் மருந்தை அயல்நாட்டுக்கு விற்பதில் எத்தனை மருத்துவக் குடும்பங்கள் ஏய்க்கப்பட்டுள்ளன.

இனி கீழாநெல்லியை நம் தமிழ் மருத்துவர்களே கூட பயன்படுத்துவது தடைப்படுத்தப்படும்.

மார்வாடிகளுக்கு விலைபோன நம் கீழாநெல்லியைப் பயன்படுத்தினார்கள் என தமிழ் மருத்துவர்கள் சிறைபிடிக்கப்படலாம்.

ஐயகோ தமிழ் மருத்துவமே...!

உன்னைக் காக்கப்போவது யார்?

படிப்பகம்

www.padippakam.com

# வாக்காளனின் சிந்தனை



கனவுகள் நடக்குமா?

1967ல் தி.மு.க. ஆட்சிக்கு வருவதாகக் கண்ண தாசன் கனவு கண்டாராம். அது நடக்க வில்லையா?

அப்படியானால், கண்ணதாசன் கனவினால் தான் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததா? 65ல் இந்தி யெதிர்ப்புக்காக மாணவர்கள் சிந்திய குருதி அலைகள் அல்லவா, தி.மு.க.வை ஆட்சிக் கரையொதுக்கியது.

இப்படித்தான், என் மூடக்கனவுகளை அடிக் கடி 'அறிவு' உடைத்துப் போடுகிறது. இன்றைக்கு அப்படி எதுவும் நேர்ந்துவிடக் கூடாது. ஏனெனில், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான் ஒட்டுப்போட வேண்டும். யாருக்கு? என்பதை முடிவு செய்கிற முயற்சியில் எனக்குப் 'பைத்தியம்' பிடிக்காமலிருந்தால் உறுதியாக ஒட்டுப் போடுவேன்.

நான் எதற்காக ஒட்டுப்போட வேண்டும்?

சனநாயகக் கடமை என்பதற்காக.

சனநாயகம் என்றதும் நினைவுக்கு வருகிறது. ஏதோ, அதற்கு நான்கு தூண்கள் உண்டு என்பார்களே அவை எவை?

நாடாளுமன்றம், நீதித்துறை, காவல்துறை, நாளிதழ் போன்ற மக்கள் தொடர்பு ஊடகங்கள்தான் அவை.

நாடாளுமன்றத்திற்குத் தூண்கள் எத்தனை?

ஐம்பது உரூபாய் நோட்டு இருந்தால் எண்ணிப் பார்க்கலாம். அதுவும் ஒருபக்கம் தான் எண்ண இயலும். இப்படியே நடந்து டெல்லிக்குப்போய்... அய்யய்யோ! அதற்குள் ஆறேழு தேர்தல்கள் வந்து போனாலும் போய்விடும். அட முட்டாளே! தூண்கள் என்றால் நாடாளுமன்ற உறுப்பினர்கள். இவ்வகையில் பார்த்தால் 545 தூண்கள். இந்தத் தூண்கள் காலநிலையைப் பொறுத்துக் குறையலாம்.

இந்தத் தூண்கள் என்ன செய்யலாம்?

நாடாளுமன்றத்தில் பேசலாம்.

எதைப்பற்றி?

எதைப்பற்றியும் பேசலாம். ஆனால் நான்கு சுவர்களுக்குள்தான். அவையின் அனுமதியில் லாத எதையும் வெளியே சொல்லக்கூடாது. மீறினால், சட்டத்தின் 500ஆவது பிரிவின்கீழ் தண்டனை.

ஒரிசாவின் முதல்வராக இருந்தவர் சட்ட மன்றத்திற்குள் நீதிமன்றத்தைக் கடுமையாகச் சாடினார். அதன்பின் அவர்மேல் வழக்கு தொடுக்கப்பட்டு, அவ்வாறு சாடியது அந்த அவையின் சிறப்புரிமை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

வெளியில் பேசினால் என்ன?

ஒருமுறை கேரள முதல்வர் இ.எம்.எஸ் நம் பூதிரிபாட் பொதுக்கூட்டத்தில் பேசும்



படிப்பகம்

www.padippakam.com

போது, நீதிமன்றம் செல்வந்தர்களுக்குச் சாதகமாக நடந்து கொள்கிறது என்று பேசிவிட்டார். அதற்காக அவருக்கு ஆயிரம் உரூபாய் தண்டத்தொகையும், ஒருமாத சிறைத்தண்டனையும் அளிக்கப்பட்டு, மேல்முறையீட்டில் தண்டத்தொகை மட்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

நீதிமன்றமும், நாடாளுமன்றமும் சனநாயகத் தூண்கள் என்று சொல்லிவிட்டு நாடாளு மன்றத்தில் பேசினால் தள்ளுபடி, மக்களிடம் பேசினால் தண்டனை என்பது என்ன ஞாயம்?

வெள்ளைக்கார ஞாயம். அவையெல்லாம் தூண்கள். சிந்திக்காது. மக்களிடம் பேசி மக்கள் சிந்தித்துவிட்டால் தூண்களின் நிலை.

சரி, நாடாளுமன்ற உறுப்பினர் வேறு என்ன செய்யலாம்?

சட்டமியற்றலாம்.

நல்லது, அதனால்தான் 'கலைஞர்' அவர்கள், தமிழை மத்தியில் ஆட்சிமொழியாக்குவோம் என்றும், வைகோ' காஞ்சியில் மாநில சுயாட்சி மாநாட்டைக் கூட்டியும் தேர்தலுக்குத் தயாரா கிறார்களா? வாஜ்பாய் பிரதமரானால் சட்டமியற்றி தமிழை மத்தியில் ஆட்சிமொழி யாக்கி, மாநில சுயாட்சியைக் கட்டியிழுத்து வந்துவிடுவார்கள்தானே?

அத்தைக்கு மீசைமுளைத்து சித்தப்பா ஆனகதைதான். ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும்.

தமிழ்நாட்டின் எண்ணிக்கை நாற்பது. அதில் கலைஞருக்கு பத்தோ, பதினைந்தோ, வைகோவுக்கு இரண்டோ; நான்கோ,

தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் தமிழ் ஆட்சிமொழி சட்டம் நிறைவேற்றி இருபது ஆண்டுகளுக்குமேல் ஓடிவிட்டது. இதை நிறைவேற்றவே துப்பில்லாமல் தமிழ்க் குடிமகன் மாரடிக்கிறார். 'கூரையேறிக் கோழிபிடிக்க முடியாதவன், வானத்தைக்கிறி வைகுண்டம் காட்டுவேன்' என்றானாம்.

அப்படியானால் நாடாளுமன்றத்தில் சட்டமியற்றவே இயலாதா?

இயலும். '69ஆவது அரசியல் திருத்தச் சட்டம்' எனும் சீக்கியர்களுக்கெதிரான சட்டம். 'தடா' சட்டம், நெருக்கடி நிலை, புதிய பொருளாதாரக் கொள்கை என்று ஏராளமான செய்திகளைச் சொல்லலாம். கூட்டிக் கழித்துப் பார்த்தால் மக்களுக்கு எதிரான சட்டங்கள்தாம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

பெரும்பான்மை, சிறுபான்மை என்ற விதிகளெல்லாம் தேவையில்லை. தேசத்திற்கு ஆபத்து என்று சொல்லி சனநாயகத்தேரை, சர்வாதிகாரப் பீரங்கியாக எந்த நேரமும் மாற்றலாம். இதற்கான சான்றுதான் நெருக்கடிநிலை. இன்னுமோர் சான்றும் உண்டு.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப் பட்டபோது, அதில் இந்துமதம் என்று குறிப்பிடாமல் இந்து வாழ்க்கைமுறை என்பதாகக் குறிப்பிட்டார் 'அம்பேத்கர்'. அடிப்படையில் இந்துமதம் ஒரு மதமே அல்ல என்பது அவரின் அறிவுகண்ட தெளிவு. ஆனால் 'காஞ்சி சங்கராச்சாரியோ' இந்து மதம் என்றுதான் குறிப்பிட வேண்டுமென அடம் பிடித்தார். 'நேரு'வோ இந்துமத மெனக் குறிப்பிட அம்பேத்கரை வலியுறுத்தி னார். அவ்வாறு இந்துமதமெனக் குறிப்பிட்டால் 'மற்ற மதங்களைப்போல் இந்து மதத்திற்கெனவும் தனிச்சட்டமியற்ற வேண்டும்' என்று வாதிட்டு, அதற்கான உறுதியை நேருவிடமிருந்து பெற்ற பின்னரே அம்பேத்கர் இந்துமதமெனக் குறிப்பிட்டார். ஆனால் அந்த இந்துச் சட்டத்தொகுப்பை நிறைவேற்றவிடாமல் இந்து வெறிபிடித்த காங்கிரசு தடுத்தபின்தான் சட்ட அமைச்சர் பதவியைத் துறந்து, அரசியலமைப்பை நானே கொளுத்துவேன் என்றார் அம்பேத்கர்.

அது இருக்கட்டும், பா.ஜ.க. தானே இந்து வெறிக்கட்சி, காங்கிரசு எப்படி இந்து வெறிக் கட்சி. செயலலிதாவும், வலது இடது பொது வுடைமைக் கட்சிகளும் காங்கிரசு மதசார்பற்ற கட்சி என்பதால் ஆதரிக்கிறார்கள் என்பது உண்மையில்லையா?

உண்மையில்லைதான். ஒருகாலத்தில் காங் கிரசை இந்தியப் பொதுவுடைமைக்கட்சி (CPI) ஆதரித்தபோது இந்தியப் பொது வுடைமைக்கட்சி - மார்க்சிஸ்ட் (CPM) அளித்த பெயர்தான் 'வலது கம்யூனிஸ்ட்' என்பது. இப்போது இரண்டுமே வலதுதான்.

மேலும் பாபர் மசூதி இடிக்கப்பட்டது யாருடைய ஆட்சி இருக்கும்போது. காங்கிரசின் ஆட்சி இருக்கும்போதுதானே. அப்போதுதானே பாரதிய சனதா விரைந்து வளர்ந்தது. காங்கிரஸ் மதசார்பற்ற இந்துவெறிக்கட்சி, பா.ஜ.க. மதச்சார்புள்ள இந்து வெறிக்கட்சி. இவ்வளவுதான் வேறு பாடு. மூப்பனாரும் மற்றோரும் மூன்றாவது அணியாய் காங்கிரசை ஆதரிப்போர்.


படிப்பகம்

www.padippakam.com

இப்படியே போனால் நாடாளுமன்றம், அரசியல் கட்சிகள் எல்லாம் மக்களுக்கு எதிராக மக்களால் ஏற்படுத்தப்படுவதாகச் சொல்லப்படும் ஒரு அமைப்பு என்ற முடிவுக்கு வந்துவிடுவோம். பின் யாருக்கு ஓட்டுப்போடுவது என்று முடிவு செய்ய இயலாது போய்விட்டால்! ஏன் இயலாது. கொள்கை - மக்களின் விடுதலை, போராட்டம், புரட்சி. உத்தி - தேர்தலில் ஓட்டளிப்பது என்று சொல்கிற விடுதலைச் சிறுத்தையாய் மாறினால்?

உத்தி என்றால் வழிமுறைதானே. இந்த வழி முறையின் மூலமாய் அந்தக் கொள்கையை எப்படி அடையப் .போகிறார்கள் என்று தெளிய விளக்காமல், 'உத்தி' மாறினாலும் 'புத்தி' மாறாது என்று பேசுவதனாலேயே ஓட்டளிப்பது சரியென்றாகிவிடாது. இதேபோல் உத்தி, நோக்கம், பிரச்சார மேடை என்றெல்லாம் சொல்லித்தான் இந்தியப் பொதுவுடைமை இயக்கமும் தேர்தலில் பங்கெடுத்தது.

இன்று போயஸ் தோட்டத்திலே இரண்டு சீட்டுக்காக 'பூப் பிடுங்குகிற நிலை அந்த இயக்கத்திற்கு.

மேலும் இவர்களின் நோக்கம்தான் வேறே தவிர, உத்தி ஒன்றுதான். எல்லோரும் தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்கிற நோக்கத்தோடு நின்றால் விடுதலைச் சிறுத்தைகள் கருணாநிதியைத் தோற்க வைக்க வேண்டும், அதற்காக செயலலிதா வெல்லவேண்டும் எனும் வேறுபாடான நோக்கத்தோடு நிற்கப் போகிறார்கள். தாயைக் கொன்றவனைப் பழிதீர்க்க தந்தையைக் கொன்றவனுக்குக் கத்தி தீட்டிக் கொடுக்கிற தனயனின் கழுத்தை நினைத்தால் தான் கவலையாய் இருக்கிறது.

அப்படியானால் நான் ஓட்டுப்போடக் கூடாதா? எப்படி எனக்குள்ளே இவ்வாறு ஒரு கேள்வி வந்தது, அடிக்கடி குறுக்கிடுகிற அறிவுதான் இப்போதும் குறுக்கிட்டிருக்கும். சுருக்கமாய் என்னதான் சொல்கிறது கேட்போம்.

தேர்தல் என்பது பொறுப்பாளர்களை (அது எத்துறை ஆயினும்) பெரும்பான்மை அடிப் படையில் தேர்வுசெய்யும் முறை.

முடியாட்சியின் முடிவில் தோன்றிய ஒரு அமைப்பு முறைதான் நாடாளுமன்ற அமைப்புமுறை. இந்நாடாளுமன்ற அமைப்பு முறை வெளித்தோற்றத்தில் குடியாட்சி முறைபோல் தோற்றமளிப்பினும், உள்ளுக் குள் ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் ஆளும் அமைப்பாகவே இருக்கும்.

சனநாயகத்தின் நான்கு தூண்கள் எனும் பொய்யைக் கிழத்தால், நீதித்துறை, படைத்துறை, நிர்வாகத்துறை, பாராளு மன்றம் எனும் நான்கு பகுதிகளைக் கொண்ட அரசின் ஒரு பகுதியே நாடாளுமன்றம் என்பது புலப்படும்.

அரசு என்பது ஒரு குறிப்பிட்ட பிரிவின் நலனை அடிப்படை நிலையாய்க் கொண்ட அமைப்பு. இதில் பிரதமர்கள் மாறலாமே தவிர அரசு மாறாது என்பதே வரலாறு.

மக்களுக்கு எதிரான அரசமைப்பில் மக்களை யும் குருட்டுப் பங்காளிகளாய் ஆக்குகிற முறைதான் இன்றையத் தேர்தல் முறை. இவற்றில் முழங்கப்படுகிற முழக்கங்கள் எழுப்புகிற புகைமண்டலம் அரசின் உண்மை யான நோக்கத்தை நம் கண்ணிலிருந்து மறைக்கிறது.

வரும் தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை வராவிட்டால், மீண்டும் ஒரு தேர்தல் வரும். மீண்டும் மீண்டும் தேர்தலே வந்து கொண் டிருக்குமா? என்றால் அதுதான் இல்லை.

இந்திய நாடாளுமன்றத்தின் நிலையற்ற நிலையையே காரணமாகக் கொண்டு அதிபர் ஆட்சியோ, வேறுவகையான ஒற்றை யாட்சியோ வரும். 'அருண் சௌரிகள்' அதற்குத்தான் தூபம் போடுகிறார்கள்.

பெரும்பான்மை நாடாளுமன்றம் அமைய முடியாதது இந்திய அரசியல் கட்சிகளின் தோல்வியல்ல, வலுக்கட்டாயமாக கட்டி வைக்கப்பட்டிருக்கும் இந்தியா எனும் அரசின் தோல்வி.

இந்தத் தோல்வியை வேறுவகையில் சரிக் கட்ட இந்திய அரசு அதிபர் ஆட்சியையோ, நெருக்கடி நிலைபோன்ற கொடுநெறி ஆட்சியையோ அமைக்கத் தயங்காது.

எனவே மக்களுக்கான வாழ்க்கைவழி என்பது தேர்தலில் ஓட்டளிப்பதல்ல. தமிழக மக்களின் விடுதலைக்கான போராட்டம்.

எல்லோரும் ஓட்டுப்போடும்போது, நான் மட்டும் ஓட்டுப்போடாமல் இருந்தால் 'பைத்தியம்' என்று சொல்லமாட்டாகளா?

அம்மணமான ஊரில் முதம்முதலாய் கோவணம் கட்டியவன் பைத்தியக்காரன் தான். பின் எல்லோரும் கோவணம் கட்டப் பழகியபோது அம்மணமானவன் பைத்தியக் காரன். எப்படி அம்மணமா? கோவணமா?

நான் கோவணம் கட்டப்போகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

# காஷ்மீர் மக்களுக்குத் தமிழகம் இழைத்த இரண்டாவது துரோகம்!

கார்கில் போருக்கான நிதி என்கிற பெயரில் தமிழக அரசு, இந்திய ஆதிக்கர்களே வியப்படையும் வகையில் ஏறத்தாழ ஐம்பதுகோடி ரூபாயைத் திரட்டித் தந்திருக்கிறது. (இதுவல்லாமல் தினமணி நாளிதழ் திரட்டிப் பெற்றதும், தனியே ஆளுநர், இந்திய இராணுவ அதிகாரிகள் பெற்ற தொகைகளும் தனி)

இந்தியாவிலேயே வேறு எவரும் இந்த அளவுக்குத் தொகையைத் திரட்டி விடவில்லை என்பது மட்டுமில்லை, பல மாநில அரசுகள் இந்த வகையில் இளித்தவாய்த்தனமாய்த் திரட்டிக் கொண்டுமிருக்கவுமில்லை.

கருநாடக அரசுக்குக் கார்கிலுக்கு நிதி தரவேண்டும் என்கிற கவலையெல்லாம் இல்லை. அவர்களுக்குக் கன்னட மாநில நலனே முக்கியமானது.

ஆனால் கருணாநிதி அரசுக்கோ தன் பதவியைத் தக்கவைத்துக் கொள்ள, அது கார்கிலுக்கு நிதி கேட்டாலும் சரி, ஒரு கழுதைக்கு நிதி கேட்டாலும் சரி அதற்கென இந்தியப் பார்ப்பனிய அரசுக்கு அடி சேவகனாய்ப் பணியாற்றுவதே வழக்கமாகிவிட்டது.

திராவிடம் பேசி, தமிழிய நலன் பேசிக் கட்சியை வளர்த்துக் கொண்ட கருணாநிதி, கன்னடத் தமிழர் பாதிக்கப்பட்டபோதோ, பம்பாய்த் தமிழர் பாதிக்கப்பட்டபோதோ எண்ணி சில ஆயிரங்கள்கூட நிதி திரட்டியதும் இல்லை. அதற்காக முனைந்திட்டதும் இல்லை. அந்த அளவுக்கு அவருக்குத் தமிழிய நலன் மீது அக்கறை(!!)

கருணாநிதி நிதி அளித்த கார்கில் நிதி எப்படித் துரோகத்தன்மானது என்று புரிந்து கொள்ள வேண்டிய அளவில் நம்மவர்களில் பலர் நேற்றைய நிகழ்வுகளை மறந்திருக்கிறோம்.

நாம் இன்றைக்குக் கார்கிலைப் பற்றியும் காஷ்மீரைப் பற்றியும் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளுகிற போதுதான் - நாம் எந்தப் பாதாளத்தில் நிற்கிறோம் என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

காஷ்மீரின் நடுப்பகுதியில் உள்ள கார்கில் தான் எல்லை என்பதாகச் சொல்லி இந்தியா கார்கில் மலைத்தொடரின் ஒரு சரிவிலிருந்து மறுசரிவை நோக்கித் தாக்கலை நடத்துகிறது. மலைத்தொடரின் மறுபக்கச் சரிவிலேயே தீவிரவாதிகள் பாக்கிஸ்தானிய ஆதரவுடன் இருப்பதாக இந்தியத் தொலைக்காட்சிகளும், பிற பரப்பல் கருவிகளும் அலறின.

முதலில் நமக்கு வருகிற கேள்வி காஷ்மீரின் நடுப்பகுதியில் இருக்கிற கார்கில் இந்தியாவின் எல்லை - என்றால், அந்த எல்லையைத் தாண்டிய பகுதிகளையெல்லாம் இந்தியா எப்படி தன் வரைபடத்திற்குள் போட்டுக் கொள்கிறது.

அங்கெல்லாம் இந்தியப்படை நிற்க முடியாது என்பது மட்டுமல்ல நிற்கக் கூடாது என்பது உலகச்சட்டம்.

அப்பகுதிகள் இந்தியாவிற்குச் சொந்தமானதும் இல்லை.

அந்தப்பகுதிகள் படத்தில் காட்டப்பட்டுள்ளது போல் பாக்கிஸ்தானுக்குச் சொந்தமானவை என்பதாக இன்றைக்கு உலகமும், உலக ஒன்றிய அவையும் ஏற்றிருக்கிறபோது - அந்தப் பகுதிகளை இந்தியப் பகுதி என்பதாக இந்திய அரசு ஓர் எல்லை மீறலான வரைபடத்தையே அல்லவா இந்தியாவில் உள்ள மக்களிடையே காட்டி ஏமாற்றிவருகிறது.

கார்கில் வரைக்குமான எல்லைப்பகுதி எல்லைக் கட்டுப்பாட்டுக்கு உரியது (லைன் ஆப் கன்ட்ரோல்) என்றாகிறபோது - அதைக் கடந்த காஷ்மீரப் பகுதிகள் இந்திய ஆதிக்க அரசின் கட்டுப்பாட்டுக்கு உள்ளடங்கியது இல்லை என்பதே மிகவும் தெளிவாகின்றது.


உலகக் களஞ்சியத் (என்சைக்குளோபீடியா)தில் ஆகட்டும், இந்திய அரசுக்குட்பட்ட பிற உலக அரசியல் வரைபடங்களில் ஆகட்டும் அந்தப்பகுதிகள் முழுக்க காஷ்மீருக்கு உள்ளடங்கியதாகவே வரையப்பட்டிருக்கிறபோது, இந்திய எல்லை மீறல் எந்தவகையிலும் நியாயமுடையது இல்லை என்பது தெரிகிறது. கார்கிலைக் கடந்த பகுதிவரைக்குமான காஷ்மீரமும் இந்தியாவுக்குச் சொந்தமுடையதில்லை.

சரி, கார்கில் என்கிற எல்லையைக் கடந்த பகுதிதான் இந்தியாவுக்கு உரிமையுடையது இல்லை என்றால், கார்கிலுக்கு உட்பட்ட பகுதிகளும் இந்தியாவுக்கு உரிமையுடையப் பகுதி இல்லை.



படிப்பகம்

www.padippakam.com




**உலகக் களஞ்சியத் (என்சைக்குளோபீடியா)தில் ஆகட்டும், இந்திய அரசுக்குட்பட்ட பிற உலக அரசியல் வரைபடங்களில் ஆகட்டும் அந்தப்பகுதிகள் முழுக்க காஷ்மீருக்கு உள்ளடங்கியதாகவே வரையப்பட்டிருக்கிறபோது, இந்திய எல்லை மீறல் எந்தவகையிலும் நியாயமுடையது இல்லை என்பது தெரிகிறது. கார்கிலுக்குட்பட்ட பகுதிவரைக்குமான காஷ்மீரமும் இந்தியாவுக்குச் சொந்தமுடையதில்லை.**

இந்தியா என்கிற அமைப்பே ஆங்கிலேயனின் வணிகத்திற்காக பல நாடுகளையும் பிடித்து இறுகக் கட்டி உருவாக்கப்பட்ட அமைப்பு என்பது ஒருபக்கம் இருக்க, காஷ்மீரம் அப்படியாகக் கட்டப்பட்ட வகையிலும் அல்லாமல், முழுக்கப்பச்சை ஏமாற்றுத்தனமாய் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

நிலவளமிக்க காஷ்மீரப் பகுதியை எப்படியும் கவர்கிற நோக்கிலான வேற்று நாட்டின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட காஷ்மீர மக்கள் தொடர்ந்து தொல்லையுற்றே வருகிறார்கள்.

காஷ்மீரில் எண்பது விழுக்காட்டுக்கு மேலான மக்கள் இசுலாமியர்களாக வாழ்கின்ற போதும், சிறுபான்மை காஷ்மீரப் பண்டிட் பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் பார்ப்பன இந்து வெறியர்களே பிற்காலத்தில் காஷ்மீரத்தை ஆண்டு வந்தனர்.

கடைசி அரசனான ஹரிசிங் இந்தியாவுடன் தாமும் இணைந்து கொள்வதான கருத்தோடு இருப்பதைக் கண்ட இந்தியப் பார்ப்பனியம் சும்மாவாக இருந்தது. தன் குடுமியை இழுத்துக் கட்டத் தொடங்கி விட்டது.

ஹரிசிங்கின் மதவெறியுணர்வு தலைவிரித் தாடியது. பள்ளத்தாக்குப் பகுதி உழவர்களை யெல்லாம் நசுக்கத் தொடங்கினான்.

இதையெதிர்த்துக் காஷ்மீரியப் பெரும் பான்மை மக்கள் எழுச்சியுறவே, அதை ஒடுக்க பஞ்சாபிய படையினரையெல்லாம் ஹரி சிங்குக்கு ஆதரவாய் அனுப்பத் தொடங்கியது இந்தியப் பார்ப்பனியக் கூட்டம்.

எப்படியோ காஷ்மீர அரசன் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும், காஷ்மீர மக்கள் இதைச் சிறிதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

'தேசிய மாநாட்டுக்கட்சி' - என்கிற அமைப் பின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட மக்கள் மிக எழுச்சியாய்க் காஷ்மீரைக் காக்கப் போராடினர்.

காஷ்மீரிய சிங்கம் என்று அழைக்கப்பட்ட ஷேக் அப்துல்லா (இன்றைய் பாருக் அப்துல்லா வின் தந்தை) உறுதியுடன் விட்டுக் கொடுக்காமல் காஷ்மீரிய மக்களின் போராட்டத்தை முன் மொழிந்தார்.

இதனால் காஷ்மீரப் பார்ப்பனப் பண்டிட் பரம்பரையினரான நேரு - ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்தார்.

அதன்படி,

★ காஷ்மீருக்கான தனிச்சட்ட வரைவு

★ இந்திய வரைபடத்தில் இருப்பதல்லாமல் பிற உரிமைகள் அனைத்தும் காஷ்மீர மக்களுக்கே!

★ காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் இணைந் திருப்பதா அல்லது தனி நாடாக இருப்பதா என்பது குறித்தான வாக்கெடுப்பை எடுத்தபின் - அதன்படியான முடிவெடுப்பது

என்பதாக இந்திய ஆதிக்க அரசும் ஏற்றுக்கொண்டது.

*"ஜம்மு - காஷ்மீர் மக்களின் சுதந்திரமான விருப்பத்தை மதிப்பதென்ற இந்திய அரசாங் கத்தின் முடிவு எந்த வகையிலும் மாறுபட்ட தல்ல, இந்திய அரசுக்கு அப்படியொரு எண்ணமும் இல்லை"*

*"இணைப்பு விவாதத்திற்குரிய பிரச்சனை யாகிற பொழுது, மாநில மக்களின் விருப்பத்தைப் பொருத்தே பிரச்சனைக்கான முடிவு மேற் கொள்ளப்படும்".*

www.padippakam.com

**ஷேக் அப்துல்லா தமிழகத் சிறையில் அடைக்கப்பட்டுக் கிடைக்கையில் அவரை விடுவிக்கச் சொல்லிப் போராடாத வகையில் தமிழகம் – காஷ்மீர விடுதலைக்கு முதல் துரோகம் செய்தது எனில் –**

**இப்போது – காஷ்மீர விடுதலை உணர்வை நசுக்குவதற்காக நடத்தப்பட்டிருக்கிற கார்கில் போருக்கு நிதி திரட்டித் தருகிற கொடுமைவழி – இரண்டாவது துரோகத்தை இழைக்கிறது.**

**இந்த இரு துரோகங்களையுமே இந்தத் திராவிடக் கட்சிகளே ஆற்றியது. தி.மு.க.வின் கருணாநிதியே இரண்டாவது துரோகத்தின் முழுக் கதாநாயகன்.**



*"ஜம்மு - காஷ்மீர் இந்திய அரசுக்குட்பட்ட ஒரு பகுதியாகக் காட்டப்படலாம்... எல்லா மாநிலங்களுக்கும் பொருந்துகின்ற அரசியல் அமைப்புச் சட்டத்தின் அனைத்துப் பிரிவுகளும் இந்த மாநிலத்திற்கும் பொருந்தும் என்று பாராளுமன்றம் சட்டம் இயற்றும் வரை இணைப்புப் பத்திர அட்டவணையில் உள்ள செய்திகளுக்கு மட்டும் இந்த மாநிலத்திற்கென பாராளுமன்றம் சட்டம் இயற்றலாம்".*

(அரசியல் அமைப்பு உரையின் மீதான விமர்சனங்களும், ஆலோசனைகளும் (அரசுப் பதிவு) எப்.ஐ.சி. - தொகுதி, ஏ.ஜி. நூரணி)

- இப்படியாகவெல்லாம் கொடுக்கப்பட்ட உரையின் அடிப்படையில் தற்காலிகமாக இணைக்கப்பட்ட காசுமீரத்தில் வாக்கெடுப்பை இன்று, நாளை என்று இழுத்துக் கொண்டே வந்தன பூணூல் கூட்டங்கள்.

போராட்டம் உச்சநிலையில் வந்தபோது, ஷேக் அப்துல்லாவைக் கைதுசெய்து - இங்கு தமிழகத்தில் கொடைக்கானலில் கொண்டுவந்து சிறைவைத்தது - இந்திய ஆதிக்க வெறி அரசு.

ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்யக் கோரியும், வாக்கெடுப்பு நடத்தக் கோரியும் காஷ்மீர மக்கள் செய்த போராட்டங்களை யெல்லாம் தொடர்ந்து நசுக்கவும், திசைதிருப்பவு மான வேலைகளையே இந்தியப் பார்ப்பனிய அரசு செய்துவந்தது.

1953 - இல் சிறையிலடைக்கப்பட்ட ஷேக் அப்துல்லா 1975 - இல்தான் விடுதலை செய்யப் பட்டார்.

அதன்பின்னர், இந்தியாவில் ஆட்சி செய்து கொண்டிருந்த பார்ப்பனப் பண்டிட் பரம்பரை யின் அடுத்த வாரிசு இந்திரா காந்தி - ஷேக் அப்துல்லாவுடன் சமரசப் பேச்சுக்கு வந்து அவரைப் பணியவைத்துக் காஷ்மீரில் தேர்தலை நடத்தி அதில் அவரை வெற்றிபெற வைத்தார்.

1977 - ஆம் ஆண்டின் பாக்கிஸ்தானுடனான போராலும், வேறு வழி இல்லை என்பதாக உணர்ந்ததாலும், ஷேக் அப்துல்லா இவற்றுக்கு இசைந்ததினால், வாக்கெடுப்பு நடத்தவேண்டு மான கோரிக்கைகள், தன்னாட்சி உரிமை போன்ற எந்த முழக்கங்களும் அக்கால் அடங்கியிருந்தன.

தொடர்ந்து தேசிய மாநாட்டுக் கட்சியுடன் காங்கிரசு கூட்டணி வைத்துக் கூடிக்கெடுக்கத் தொடங்கிய வரலாறுகள் - இன்றைக்குப் பாருக் அப்துல்லாவுடன் பா.ஜ.க. கூட்டணி வைத்துக் கொண்டிருப்பதை ஒத்ததே.

இதில் வாக்கெடுப்புகளும், காஷ்மீர் தனி நாட்டுரிமைக்கு உரியதுதான் என்கிற சட்ட வழிப்பட்ட நியாயங்களேகூட மறைக்கப்பட்டு விட்ட நிலையில் காஷ்மீரை விழுங்கி இருக்கிறது இந்தியப் பார்ப்பனீயம்.

ஷேக் அப்துல்லா தேர்தல் பாதை நாடிப்போய், கூட்டணியில் கரைந்துபோகத் தொடங்கியபின் காஷ்மீரிய மக்கள், படை கட்டி காஷ்மீர விடுதலைக்கான கோரிக்கையை வலியுறுத்தத் தொடங்கிவிட்டனர்.

**ஜம்மு காஷ்மீரிய விடுதலை இயக்கம்** உள்ளிட்ட பல அமைப்புகள் அங்கு கருவி ஏந்திய நிலையில் வளர்ந்திருக்கின்றன.

அவ்வமைப்புகளில் சில பாக்கிஸ்தானிய அரசின் ஆதரவைப் பெற்றிருந்தாலும், பெரும் பாலான அமைப்புகள் தனித்தே செயல்படு கின்றன.

அந்நிலத்தின் உரிமைப்போராட்டத்தைக் கருவிவழி அவர்கள் தீர்மானிக்க வேண்டிய கட்டாயத்தை அவர்களுக்குத் தந்தது இந்த இந்தியப் பார்ப்பனிய அரசே ஆகும்.

இந்தச் சூழலை இப்படியாக ஏற்படுத்திவிட்டு, இன்றைக்கு அவர்களையெல்லாம் தீவிரவாதிகள், வன்முறையாளர்கள், தேசத் துரோகிகள், பிரிவினைவாதிகள் என்று கொக்கரிக்கின்ற பார்ப்பனிய வெறியர்களின் அலறல்கள் எவ்வளவு பெரிய அயோக்கியத்தனமானது.

நம்ப வைத்துக் கழுத்தறுக்கிற இந்தப் பூணூலியப் பார்ப்பனியத்திற்கு ஆட்பட்டல்லவா

www.padippakam.com

நம் திராவிடப் பாட்டாளிய மொட்டைத் தலைகளெல்லாம் தலையசைத்துக் கொண்டிருக் கின்றன.

**தமிழகத்தின் இரண்டகம்**

அடைந்தால் திராவிடநாடு இல்லையேல் சுடுகாடு - என்றவர்கள், எங்கே ஷேக் அப்துல்லாவைக் கொடைக்கானலில் கொண்டு வந்து வைத்ததைப்போல் நம்மைக் காஷ்மீரில் கொண்டுபோய் வைத்து விடுவார்களோ என்று ஒடுங்கிய திராவிடக் கட்சிகள் - தங்களின் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டனவே அல்லாமல், ஷேக் அப்துல்லாவைத் தமிழகத்தில் சிறைவைத்திருப்பது தமிழக மானத்திற்கு இழிவு என்று எதிர்க்கத் தொடங்கினார்களா என்றால் இல்லை.

காஷ்மீர் உரிமைப் போராட்டத்தின் நியாயத்திற்கு ஆதரவாகவோ, காஷ்மீரில் நடத்தப் பட வேண்டிய வாக்கெடுப்பு தொடர்பாகவோ இவர்கள் என்றைக்குமே குரல் எழுப்பியவர்களும் இல்லை.

பாராளுமன்றம் போய், சட்டமன்றம் போய் இவர்களின் தனி மாந்த ஒழுக்கக் கேடுகளுக்கும், இனமான இழிவுக்கும் வாய்க்கால் அமைத் தார்களே தவிர இவர்களுக்குத் தமிழகத்தின் உரிமையிலோ, காஷ்மீர ஆதரவிலோ அக்கறை செலுத்த நேரமே கிடைக்கவில்லை (!)

ஷேக் அப்துல்லா தமிழகத் சிறையில் அடைக்கப்பட்டுக் கிடைக்கையில் அவரை விடுவிக்கச் சொல்லிப் போராடாத வகையில் தமிழகம் - காஷ்மீர விடுதலைக்கு முதல் துரோகம் செய்தது எனில் -

இப்போது - காஷ்மீர விடுதலை உணர்வை நசுக்குவதற்காக நடத்தப்பட்டிருக்கிற கார்கில் போருக்கு நிதி திரட்டித் தருகிற கொடுமைவழி - இரண்டாவது துரோகத்தை இழைக்கிறது.

இந்த இரு துரோகங்களையுமே இந்தத் திராவிடக் கட்சிகளே ஆற்றியது. தி.மு.க.வின் கருணாநிதியே இரண்டாவது துரோகத்தின் முழுக் கதாநாயகன்.

கருணாநிதி தமிழகத்திற்குப் பல துரோகத் தனங்கள் செய்தவர் எனில் காஷ்மீர விடுதலை உணர்வுக்கு அவர் செய்ததும் பெரும் துரோகத்தன மானதே.

பாரதீய குடுமிகளின் கூட்டால் காவி போர்த்தித் திரியும் இந்தத் திராவிடமே மக்கள் விடுதலைப் போராட்டங்களுக்கு முதல் எதிரி என்பதை இனியேனும் தமிழியச் சிந்தனையர்கள் உணரட்டும்.

காஷ்மீர் விடுதலை போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதும்,

காஷ்மீர் மக்களிடையே வாக்கெடுப்பு நடத்த வற்புறுத்துவதும்,

காஷ்மீர் உரிமைக்கு எதிராக வெறியாட்டம் ஆடிய இந்திய வெறிப்படையைக் கண்டிப்பதும்

தமிழக மக்கள் உரிமைக்குப் போராட முன் வருகிற அனைவரின் கடமையுமாகும்.

அவ்வகை முயற்சிகளே - தமிழக அளவில், திராவிடக் கட்சியர்களால் செய்யப்பெற்ற இரண்டகச் செயல்பாடுகளை அழிக்கும். தமிழ்த் தேசியத்தைச் செழிப்புற வைக்கும்.

●

'குறிஞ்சி
மழலையர் பள்ளி'
வந்தவாசி 604 408

தமிழ்ப் பற்றாளர்களே கொடையுள்ளத் தினரே... தமிழகப் பழங்குடி இருளர் பகுதியில் அக்குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பதற்காகத் தமிழ்வழிப் பள்ளியை இந்த ஆண்டு தொடங்கி நடத்துகிறோம். **தமிழ்வழிக் கல்விக்கழகத்தின்** வழியே நடத்தப்படுகிற இக்கல்விப் பணிக்குத் தங்களால் இயன்ற வகையில் துணைசெய்யக் கேட்டுக் கொள் கிறோம். பொருட்களாகவோ, பணமாகவோ அளிக்கலாம்.

தொடர்புக்கு : தலைமை ஆசிரியர்;
'குறிஞ்சி மழலையர் பள்ளி, திண்டிவனம் சாலை,
அண்ணா நகர், வந்தவாசி 604 408

தட்டச்சு பயில!
தட்டச்சு வேலைகள் செய்ய!

பாபு தட்டச்சு நிலையம்

சன்னதி தெரு,
வந்தவாசி - 604 408
திருவண்ணாமலை மாவட்டம்.

து.வி. திருவள்ளுவன்

–விளம்.


படிப்பகம்

www.padippakam.com

# சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பு மாநாடு










*சாதித் தீயை ஓதி வளர்க்கும்*
*வேதமொழியின் வேரறுப்போம்!*
*கருவறை இருட்டில் மதவெளியூட்டும்*
*தேவ பாசையின் திமிரழிப்போம்!*
*சரியும் தமிழகம் சரியாதுயர*
*சமஸ்கிருத - பார்ப்பனிய முடிசாய்ப்போம்!*

சூன் - 13 அன்று சென்னை பெரம்பூரில் உள்ள கமலாம்பாள் திருமண மண்டபத்தில் தொடங்கிய. சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டின் முழக்கங்கள்தாம் மேலே கண்டவை.

காலை 11 மணிக்குத் தொடங்கிய இம்மாநாட்டின் வரவேற்புரையை த.ஒ.வி. இயக்கத் தோழர் 'இலக்கியன்' ஆற்றினார். உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கரடிப்பட்டி கண்ணன் அவர்களின் தொடக்க உரைக்குப்பின் கருத்தரங்கம் தொடங்கியது.

கருத்தரங்கிற்கு த.ஒ.வி.இ. தோழர் 'சிவா' அவர்கள் தலைமையேற்றார். தோழர். எசு.வி. இராசதுரை அவர்களின் கட்டுரை படிக்கப்பட்டபின், தோழர் உஞ்சைராசன், (தலித் பண்பாட்டுப் பேரவை) சொல்லாய்வறிஞர் அருளியார், பாவலர். இன்குலாப் ஆகியோர் கருத்துரை ஆற்றினார்.

பகலில் தமிழ்வழிக் கல்விக்கழகப் பள்ளிக் குழந்தைகளின் கலைநிகழ்ச்சியும் வட ஆர்க்காடு மாவட்டத் தோழர்களின் நாடகமும் முடிவுற்றபின் தோழர். இளங்கோவன் தலைமையில் பொது அரங்கம் தொடங்கியது. மாநாட்டுத் தீர்மானங்களைத் தோழர்கள், முரசொலி, தமிழ்ப்பாண்டியன், மணிமாறன், மகிழ்வரசன் ஆகியோர் முன்மொழிந்த பின், திரு. பழ. நெடுமாறன் (தமிழர் தேசிய இயக்கம்) திரு. வேலுமணி (மக்கள் எழுச்சி மன்றம்) அ. செஞ்சூரியன் (டாக்டர் அம்பேத்கர் நற்பணி இயக்கம்) துரை. தென்னவன் (பைந்தமிழ்ப் பாசறை) அருமைநாதன் (தாய்மண் இலக்கியக் கழகம்) தீனன் (தமிழர் குடியரசுக்கட்சி) இறை. பொற்கொடி (தமிழ்வழிக் கல்விக்கழகம்) சந்திரேசன் (வணிகர் கழகச்செயலர்) மழைமேனிப் பாண்டியன் (அம்பேத்கர் மக்கள் கட்சி) தமிழேந்தி (மார்க்சிய - பெரியாரிய பொதுவுடைமைக்கட்சி) விடுதலை இராசேந்திரன் (பெரியார் தி.க) இரா. திருமாவளவன் (விடுதலைச் சிறுத்தைகள்) புலவர் இறைக்குருவனார் (தென்மொழி அவையம்) ஆகியோர் உரையாற்ற தோழர் திலகர் அவர்களின் நன்றியுரையுடன் மாநாடு நிறைவுற்றது.

**மாநாட்டுத் தீர்மானங்கள்**

**தீர்மானம் எண் - 1**

மொழிக்கு வகுப்பு உள்ளடக்கம் ஏதுமில்லை என்பர் குமுக அறிவியலாளர்கள். ஒருமொழி வகுப்பு ஆதிக்கத்திற்குப் பயன்படுகிற அதே வேளையில் வகுப்பு ஒடுக்குமுறைக்கு எதிராகவும் பயன்படுத்தப்படும் என்பர்.

ஆனால், மேற்கூறியவற்றிற்கு மாறாய் ஆதிக்கம் ஒன்றையே குறிக்கோளாய்க் கொண்டு இயங்குகிற, மக்களுக்கு வேறு எவ்வகையிலும் பயன் ஈயாதமொழியாக விளங்குகிற சமஸ்கிருதம், இந்தியச் செயற்கைக் கட்டமைப்பிற்குள் அடக்கப்பட்டுள்ள எந்தவொரு தேசிய இனத்தின் மொழியுமல்லாது இருக்கிறபோது அம்மொழியைத் தேசிய


படிப்பகம்

www.padippakam.com

மொழிகளின் பட்டியலில் இருந்து நீக்கவேண்டும் என்று இம்மாநாடு இந்திய அரசைக் கோருவ தோடு, இக்கோரிக்கை வெற்றிபெறப் போராட அணியமாகுமாறு தமிழக மக்களை அறைகூவி அழைக்கிறது.

**தீர்மானம் எண் - 2**

தமிழ் நீச பாசை, சமஸ்கிருதம் தேவ பாசை எனும் சாதி ஆதிக்கமிக்க மொழி வெறித்தனத்தின் செயல்வடிவமாய், தமிழக மக்கள் வழிபடுகிற கோவில்களில் சமஸ்கிருதமே வழிபாட்டு மொழி யாய் இருந்து வருகிறது. இதை எதிர்த்து பல்வேறு வகையான போராட்டங்களும் கருத்துப் பரப்பல்களும் நீண்ட காலமாய் நடைபெற்று வந்துள்ளது.

கருவறையிலிருந்து சமஸ்கிருதத்தை நீக்குவது என்பது தமிழக மக்களின் த்ன்மானப் போராட்டத் தின் ஒரு கூறாக மேலும் வளத்தெடுக்கப்படல் வேண்டும்.

கருவறையிலிருந்து சமஸ்கிருதத்தை விரட்டு வது என்பது, தமிழகக் கோவில் கருவறைக்குள் குந்தித் தின்கிற பார்ப்பனரை வெளியேற்றுகிற போராட்டத்தோடு இணைந்தெழ வேண்டியதே வருங்காலத் தேவையாகிறது.

தீர்மானம் : தமிழகக் கோவில்களில் தமிழே வழிபாட்டு மொழியாக வேண்டும். பார்ப்பனர் மட்டுமே அர்ச்சகராக முடியும் என்கிற நிலையை நீக்க வேண்டும் என இம்மாநாடு அரசைக் கோருவதோடு இதற்கெனப் போராட தமிழக மக்களை அணியமாகக் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் - 3**

இந்திய அரசின் தொலைக்காட்சி இந்தியை மட்டுமே தன் ஒளிபரப்பு மொழியாகக் கொண்டுள்ளது கண்டிக்கவும் எதிர்க்கவும் தக்கது. மேலும் சமஸ்கிருத செய்தி வாசிப்பு என்பது சமஸ்கிருதத்திற்கு தேசியத் தகுதியை மெல்ல மெல்ல இந்தி வழியாக உருவாக்குகிற சூழ்ச்சி நடைமுறையே ஆகும்.

தீர்மானம் : தொலைக்காட்சியின் சமஸ்கிருத செய்தி வாசிப்பை நிறுத்தக் கோருவதுடன் இக்கோரிக்கைக்காகப் போராட முன்வருமாறு தமிழக மக்களை அழைக்கிறது.

**தீர்மானம் எண் - 4**

எந்தவொரு கொள்கையும் போராட்டமின்றி வெற்றி பெற்றதில்லை. சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பின் அடையாளமாய் இதன் முன் மொழி யப்பட்ட மூன்று தீர்மனாங்களையும் போராட்ட வழியில் வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு தமிழக அமைப்புகளையும், மக்களையும் சாரும்.

தீர்மானம் : ஆதிக்க சமஸ்கிருதத்தை

- 'தேசிய' மொழிகளின் பட்டியலிலிருந் நீக்குக!

- தொலைக்காட்சி செய்தியிலிருந்து நீக்குக

பார்ப்பனரையும் சமஸ்கிருதத்தையு கோயில் கருவறையிலிருந்து வெளியேற்றுக!

எனும் முழக்கங்களின் அடிப்படையி சென்னை சாஸ்திரி பவன் முன் முழுநாள் தொட முழக்கப் போராட்டத்தை செப்டம்பர் 17 அன்று நடத்துவது என இம்மாநாடு அறிவிக்கிறது.

**சிறப்புத் தீர்மானங்கள்**

**தீர்மானம் எண் - 1**

ராஜீவ் கொலைவழக்கில் பூந்தமல்ல வழக்குமன்றம் 26 தமிழர்களுக்கு விதித்த தூக் தண்டனையிலிருந்து 19 பேரை உச்ச வழக் மன்றம் விடுவித்தது போக எஞ்சிய நால்வரையு விடுவிக்க இம்மாநாடு உச்ச வழக்குமன்றத்தை கோருகிறது. மேலும் அதற்கான பணிகளி தன்னுடைய ஒருமைப்பாட்டைத் த.ஒ.வி.இ தெரிவித்துக் கொள்வதோடு அதற்கான செய பாடுகளில் இணைந்து கொள்ள வேண்டியது தமிழர்கள் மட்டுமல்லாது மாந்த உரிமை எண்ணுகிற ஒவ்வொருவரின் கடமையாகு என்பதையும் மக்களுக்கு உணர்த்துகிற பணியி தொடர்ந்து த.ஒ.வி.இ ஈடுபடும் என்பதையு தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் எண் - 2**

இஸ்லாமிய மக்களைப் பெரும்பான்மை யாகக் கொண்ட காசுமீரை ஆண்ட இந் மன்னனிடம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்பட காசுமீரின் ஒரு பகுதியை இந்திய அரசும், போரி மூலம் மற்றொரு பகுதியை பாகிஸ்தானும் பங் போட்டுக்கொண்டு காசுமீர் மக்களை தொடர்ந்து வேட்டையாடி வருகின்றன. அதன் ஒரு பகுதியாய் கார்கிலில் பாகிஸ்தான் தீவி வாதிகள் எனும் பெயரில் இந்திய அரசு காசுமீ விடுதலைப் போராளிகளை வேட்டையாட வருகிறது. இந்திய - பாகிஸ்தான் போர் அபாய எனும் பெயரில் இரண்டு அரசுகளும் திரை மறைவில் காசுமீரின் விடுதலை வேட்கையை சாகடிக்க எத்தனிக்கும் சதியைச் செய்து வருவ இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதோ பாகிஸ்தான் தீவிரவாதிகள் என்ற பெயரில் இந்தி அரசு வேட்டையாடி வருவது காசுமீர் போரா களையே என்பதையும் மக்களுக்கு உணர்த் வேண்டிய கட்டாயம் தேசிய விடுதலை உரிமையை நாடுகிற ஒவ்வொருவரின் கட யாகும் என்று தெரிவித்துக் கொள்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

தமிழக ஒடுக்கப்பட்டோர் விடு லை இயக்கம் ஒருங்கிணைத்த சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பு மாநாடு' பெருமளவில் வெற்றியாக முடிந்தது. சில ஒடுக்கப்பட்ட இயக் ங்களின் தலைமைகளின் சிந்தனை ளையும் செயற்பாடுகளையும் ரியான திசைவழியில் செலுத்த வேண்டிய தேவையையும் நமக்கு ணர்த்தியது.

'ஒரு சிறு நெருப்புப் பொறியே பெருங்காட்டை அழித்து விடும்' என்பதற்கொப்ப - இன்றைய காலச் சூழலில் சிறிய அளவில் சரியான கொள்கை முழக்கோடு த.ஒ.வி.இ. எடுத்துள்ள அரசியல் நிலைப்பாடு ஆயிரமாண்டுக்கால ஆரியப் பார்ப் பனிய ஆதிக்கத்தை அழித்தொழிக் கும் பெரு நெருப்பாக எரியப் போகிறது.

மாநாட்டில் 'தலித் பண்பாட்டுப் பேரவை' அமைப்பாளர் தோழர் டஞ்சைராசன் அவர்கள் உரையாற் றும்போது, "நாம் கேட்கும் பல உரிமைகளை மறுத்து, கேட்காத சில சலுகைகளை மட்டுமே வழங்குவது இன்றைய அரசுகளின் ஏமாற்று வேலை என்றும், பார்ப்பனியத்தின் ஒடுக்குமுறைத் தந்திரமே என்றும் கூறினார். அதற்கு எடுத்துக்காட் டாக குழந்தைகளுக்கு அளிக்கின்ற இலவசச் சோறு, உடை, இன்றைய சமத்துவபுரங்களைக் கூறினார். தங்களது முழு உரிமை என்ன தென்று தெரியாமல் இருக்கும் பொருட்டு, சாதி, மத மயக்கத்தில் மக்களை அழுத்திச் சில சலுகை களை மட்டும் அளிப்பதைக் கண்டித் தார்.

சொல்லாய்வு அறிஞர் அருளி யார் அவர்கள் 'பிட்சை' - 'சுபிட்சம்' 'கேத்திரம்' என்ற சொல்லாய்வு களின் வழியே ஆரியர்களின் நாடோடி வாழ்க்கையையும், பிச்சை எடுத்து வாழ்ந்த வரலாற்றையும் விளக்கினார். இன்னும் பல தமிழ் 'வேர்ச்' சொற்களைக் கொண்டு புதியதாக பல சொற்களை உரு வாக்கி சமஸ்கிருத மொழிக்கு உயிரூட்டினர் என்பதையும் விளக்கி னார்.

அறிஞர் தோழர் இன்குலாப் அவர்கள் அரசர்களின் ஆதிக்க வரலாற்றை தோலுரித்தார். இன்று தமிழகத்தில் ஒவ்வொரு குலக்குழுத் தலைவர்களும் தங்கள் ஆண்ட பரம்பரை என்று மீண்டும் மக்களை மயக்கத்தில் ஆழ்த்தி - ஒரு குட்டி அரசர்களாக இந்தியப் பார்ப்பனர் களிடம், அடிமைப்படத் துடிக் கின்றனர். அவ்வகையில், 'பள்ளர் கள்' தங்களை 'மல்லர்கள்' என்று வேண்டுமானால் அழைத்துக் கொள் ளளாமே தவிர 'தேவேந்திரர்' என்று எந்த வகையிலும் அழைக்கக்கூடாது என்று தெளிவுபடுத்தினார்.

நிலவுடைமைக் காலக்கட்டத்தில் தங்களுக்குள் பல முரண்பாடுகள் இருந்தாலும், பொது எதிரியாகிய ஆங்கிலேயரை எதிர்த்து வீரச்சாவு அடைந்த வீரபாண்டிய கட்டப் பொம்மன்?, வெள்ளையத்தேவன் சுந்தரலிங்கம் போன்றவர்களின் குடிப்பிரிவைக் காட்டியே இந்திய-

## சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பு மாநாடும் தமிழக மக்களின் வாழ்வுரிமைப் போராட்டங்களும்!

– கரடிப்பட்டி கண்ணன் –

திராவிட-பாட்டாளிய-தலித் போர் வையில் மக்களைப் பிரித்து பார்ப் பனியத்திடம் அடகு வைக்கத் துடிக் கும் கருப்பையா மூப்பனார், இராம மூர்த்திகள், செயலலிதா, கருணாநிதி, கோபால்சாமி, இராமதாசு, கிருட்டிணசாமி போன்றவர்களிடம் தமிழக மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்திய பார்ப் பனிய நச்சுவேர்கள் தலைவர்களின் வழியே சல்லிவேர்களாக மக்களிடம் பரவுவதற்குமுன் நாம் இந்திய பார்ப் பனிய ஆணிவேரை வெட்டி வீழ்த்த வேண்டும்.

தமிழ்த் தேசிய சார்பு நிலையி னின்று திரு. பழ. நெடுமாறன் அவர்கள், புலவர் இறைக்குருவனார், தோழர் பெ. மணியரசன், தோழர் விடுதலை இராசேந்திரன் போன்ற வர்கள், இந்தியப் பார்ப்பனிய ஆக்கத்திற்கு சமசுக்கிருதம் மொழி நிலையில் எந்தெந்த வகையில் பயன்படுகிறது என்பதை விளக்கி னர்.

அடுத்து உரையாற்றிய ஒடுக்கப் பட்ட இயக்கங்களின் தலைவர்கள் சாதிய ஒடுக்குமுறையையே முதன்மைப்படுத்தினர். இந்தச் சாதிய ஒடுக்குமுறையின் தன்மையை - பொருளியல் சுரண்டலின் உள்ளடக் கத்தை நாம் வெளிப்படையாக உணர முடியாத அளவிற்கு, இந்து மதத்தின் போர்வையில், சமசுக்கிருத வலைப்பின்னலில் தேசிய இன ஒடுக்கு முறையோடும், மதவழி சிறு பான்மை மக்களின் ஒடுக்குமுறை யோடும் - வல்லரசுகளின் துணை யோடு இந்திய தேசிய அரசுக் கட்டமைப்பிற்குள் தொடர்ந்து ஆரியப் பார்ப்பனியம் ஆளுமை செய்து கொண்டுள்ளது. ஒவ்வொரு ஒடுக்குமுறையும் ஒன்றையொன்று சார்ந்திருந்தாலும் நாம் தனித்தனி யாக இயங்குவதால் இந்தியப் பார்ப்பனியம் நிலைகொண் டுள்ளது.

பலமுனைத் தாக்குதலையும் நாம் ஒருங்கிணைத்து நடத்தினால்தான் இந்தியப் பார்ப்பனியத்திடமிருந்து நாம் விடுபட முடியும்.

இன்றைய போலியான பாராளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்ற இயக்கக் கொள்கையுடையோர்க் கும், தேர்தலில் பங்குபெற வேண்டு மென்று புதியதாக நுழைந்திருக் கின்ற விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் சிலருக்கும் இடையில் ஏற்பட்ட சில தகராறுகளை எதிர் காலத்தில் நாம் பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும். இணைய முடியாதவர்கள் தனி வழியே சென்று மக்களிடம் அம்பலப்பட்ட டும்.

அன்றைய காலச்சூழலில் அரசி யல் திசைவழியைப் பற்றிய் தெளி வில்லாதிருந்தாலும், தந்தை பெரி யார், அண்ணல் அம்பேத்கார், சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் போன்றோரின் பேச்சுகளில் எழுத் துகளில் ஒடுக்கப்பட்ட உழைக்கும் அடித்தள மக்களைப் பற்றிய கவலை இருந்தது. உண்மை இருந்தது.

ஆனால், அடுத்து தமிழக அளவில் அண்ணாவின் அடுக்கு மொழிப் பேச்சும், கலைஞரின் திரைப்பட வசனங்களும் கோபால் சாமியின் வீர உரைகளும் தமிழக மக்களை எந்த இடத்தில் கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

போய் நிறுத்தியிருக்கின்றன என் பதை நாம் அறிவோம்.

பாட்டாளியின் உழைப்பில்லாமல் உழைக்காத பார்ப்பனர்களால் உயிர்வாழ முடியாது என்ற கோட்பாட்டை உணர்ந்து மருத்துவர் இராமதாசு அவர்கள் தமிழகப் பாட்டாளி மக்களை இந்திய பார்ப்பனியத்திடம் அடகு வைத்திருக்கின்றார்.

தங்கள் நலனுக்காக - ஆளுமைக்காகச் சாதிய முரண்பாடுகளைத் தீர்க்க விடாமல் முடிச்சுப்போட்ட பார்ப்பனர்களின் துணையுடன் சட்டமன்ற உறுப்பினர் ஆன மருத்துவர் கிருட்டிணசாமி அவர்கள், அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் ஆவதற்கு சென்னைக்கும் புதுடில்லிக்கும் பறந்து கொண்டிருக்கிறார்.

பார்ப்பனர்கள் போட்ட முடிச்சை பார்ப்பனர்கள் எவ்வாறு அவிழ்ப்பார்கள்? பார்ப்பனியக் கொள்கையால் பாதிக்கப்பட்டவர்கள்தாமே அதை அவிழ்க்க முடியும்?

இந்தியமும் பார்ப்பனியமும் முதலாளியமும் இங்கு ஒன்றாக இருக்கும்போது, பாட்டாளி மக்களின் விடுதலைக்கும், ஒடுக்கப்பட்ட சாதிய மக்களின் விடுதலைக்கும் மீண்டும் மீண்டும் இந்தியப் பார்ப்பனியத்திடம் செல்லுவது யாரை ஏமாற்ற?

திராவிடத்தை - தமிழகத்தை - பாட்டாளியை - சாதிய எதிர்ப்புணர்வை இந்தியப் பார்ப்பனியத்திடம் கரைத்த - அடகு வைத்த தலைவர்களைக் கண்கூடாகக் கண்ட பிறகும், அடுத்தக் கட்டத் தலைவர்களும் அதை நோக்கியே சென்று கொண்டிருப்பது எவ்வகையில் சரியாகும்?

தமிழகத்தில் குமுக அமைப்பில் அடிநிலையில் நின்று அனைத்துச் சுமைகளையும் தாங்குகின்ற பறையர், பள்ளர், அருந்ததியர் போன்ற மூத்த தமிழ்க்குடி மக்களின் உரிமைகளை - விடுதலையை முன்னிலைப்படுத்தி - அதற்கானப் போராட்டங்களை முன்னெடுத்த ஓரளவு இளைஞர்களைத் திரட்டிய விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் தோழர் திருமாவளவன் அவர்களின் கொள்கை முடிவு தமிழகத் தேசிய விடுதலையையும், ஒடுக்கப்பட்ட சாதிய மக்களின் விடுதலையையும் இணைத்து - இரண்டு முரண்பாடுகளையும் தீர்த்து - அதன் வழியே இந்தியப் பார்ப்பனிய தேசியத்தை ஒழிக்க வேண்டுமென்ற சிந்தனையாளர்களுக்குப் பெரும் இடியாக இருந்தது.

பல ஒடுக்குமுறைக்கு வேராக இருக்கின்ற இந்தியப் பார்ப்பனியத்தின் வெளிப்பாட்டிற்கான ஊடகமாக இருக்கினற சமசுக்கிருதத்தின் ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டில் தாங்களும் பார்ப்பனியத்திற்குத் துணைபோவதை அறிவித்தது; முந்தைய தலைவர்களைப் போல் ஒடுக்கப்பட்ட சாதிய மக்களுக்கு இழைக்கும் இரண்டகமாகும். வெண்ணை திரண்டு வரும் நேரத்தில் தாழியை உடைத்த கதையாக பல உள்முரண்பாடுகளால் சிதைவை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்ற இந்தியப் பார்ப்பனியத்திற்கு முட்டுத் தாங்குகின்ற வேலையைச் செய்வது - உங்களின் மனச்சாட்சியே உங்களை உறுத்தும்.

அறிஞர் அண்ணா அவர்கள், இன்னும் திராவிட நாட்டுப் பிரிவினைக்கான காரணம் அப்படியே இருக்கிறது என்றும், அதை அடைவதற்கான வழிமுறையை மட்டும் இப்போதைக்குச் சிறிது மாற்றுகிறோம் என்றும் சொல்லிவிட்டு - திராவிடர்களின் கொள்ளைக் காடாகத் தமிழகத்தை ஆக்கிவிட்டுச் சென்றுவிட்டார். கரைவேட்டி அரசியல் சாய்க்கடையில் தமிழக மக்கள் திக்குமுக்காடி கரையேற முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றனர்.

அவரைப் போலவே, 'விடுதலைச் சிறுத்தைகளின் கோட்பாடு' அப்படியே இருக்கிறது. 'உத்தியை' மட்டுமே மாற்றி இருப்பதாகத் தாங்கள் பலமுறை மாநாட்டில் உரைத்தது - தமிழக வரலாறு தெரியாதவர்களுக்குப் புரியாமல் இருக்கலாம்; ஆனால் வரலாறு தெரிந்தவர்களுக்கு உரையின் உள்ளீடு புரியாமலா இருக்கும்?

எத்தனைக் கட்சிகளிடம் - எத்தனை தலைவர்களிடம் - எத்தனை முறைகள் இந்த அப்பாவித் தமிழக மக்கள் ஏமாறுவது?

ஆட்டு மந்தைகளாக - மாட்டு மந்தைகளாக - இன்று தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை இந்தியப் பார்ப்பனியத்திடம் ஓட்டிக் கொண்டு விற்பதற்கு எத்தனைத் தலைவர்கள் புறப்பட்டு, இருக்கின்றீர்கள்?

மக்களைப் பார்ப்பனியத்திடம் அடகு வைத்து அவர்களிடமிருந்து பதவியாகவும் பணமாகவும் பெறலாம் என்று கனவில் மிதக்கின்றீர்கள்!

ஆனால் ஒடுக்கப்பட்ட இளைஞர்களின் மக்களின் மூச்சுக்காற்று மிக மிக வெப்பமாக இருக்கப் போவதை நீங்கள் உணரப் போகிறீர்கள்!

சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டின் வழியே, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் தெளிவான திசையைக் காட்டி இருக்கிறது. இன்றைய பச்சோந்தித் தலைவர்களை இந்தியப் பார்ப்பனியத்திடம் கரைத்துவிட்டு, தமிழக மக்கள் தங்கள் வாழ்வு உரிமைக்காகத் தொடர்ந்து போராடுவார்கள்!

ஒடுக்கப்பட்ட தமிழக மக்களே விரைந்து வாருங்கள். அந்தக் காலத்தை கனிவிப்போம்!! வெற்றியை நமதாக்குவோம்!!!

**சாதி - மத மறுப்புத் திருமண விழிப்புணர்வு இயக்கம்**

** சாதி - மத மறுப்புத் திருமணங்களை நடத்தி வைப்பது * விதவைத் திருமணங்களை நடத்தி வைப்பது போன்ற பல செய்திகள் இவ்வியக்கத்தின் நோக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*
*தொடர்புக்கு : சுசி. கலையரசன், 194, இளங்கோ நகர், திருவள்ளுவர் பேருந்து நிலையம் பின்புறம், கோவை - 44.*

**நண்பர்கள் திருமணத் தகவல் மையம்**

** இத்திருமண மையம் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கானது.*
** இத்திருமண மையம் வருவாய் வேலையற்ற தாழ்த்தப்பட்ட, பழங்குடி இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற பயன்படுத்தப்படும் என்பதான பல்வேறு செய்திகளை நோக்கமாகக் குறிப்பிடுகின்றனர் இம்மையத்தினர். தொடர்புக்கு : 29, வாலாசா சாலை, முதல் மாடி, (கலைவாணர் அரங்கம் அருகில்) சென்னை - 2.*



படிப்பகம்

www.padippakam.com

# அன்புத் தோழனுக்கு,

நாமும் பலமுறை இதுபற்றியெல்லாம் பேசியிருக்கிறோம். ஆனால், இன்றைக்கும் இவர்கள் இதே நிலையிலேயே இருக்கிறார்கள் என்று நீ எழுதிய மடலைப் பார்த்தேன்.

தமிழகத்தில் உள்ள பிறமொழியினர் குறிப்பாகத் தெலுங்கர், கன்னடர், மலையாளி - ஆகியோரின் நிலை குறித்து இன்னமும் எந்த வகையிலும் தமிழ்த்தேசியர்கள் கருத்துத் தெளிவில்லாமல் இருப்பது பற்றியும் குறிப்பிட்டிருந்தாய்.

தோழனே - தமிழ்த் தேசியச் சிந்தனையாளர்கள் இது குறித்துக் கருத்துச் செலுத்தாமல் இருப்பதால்தான் இன்றைக்கும் சிக்கல்கள் பெருமளவில் பிளவுகளாக வெடித்துக் கொண்டிருக்கின்றன.

சாதிச்சிக்கல், மதச்சிக்கல்கள் என்பதோடு இந்தத் திராவிட மாயை குறித்தும் இவர்களின் கவனமும் ஆய்வும் குன்றிப் போனதாலேயே தமிழின மீட்புக் கருத்தியலும் குன்றிப் போயிருக்கிறது என்பதை நீயும் உணர்ந்திருப்பாய்.

சாதியை மறந்துத் 'தமிழர்களாய்' ஒன்றிணைவோம் என்பவர்கள் நடைமுறையில் சாதியை மறக்காமல் திருமணச் சடங்குகளைச் செய்துகொண்டு 'தமிழ் எங்கள் உயிருக்கும் நேர்' என்றே முழங்குகின்றனர். அவர்களுக்குச் சாதி ஒழிப்பு குறித்துக் கவலையே இல்லாதபோது, அவர்களிடம் எப்படிச் சாதி ஒழிப்புப் பற்றிய சிந்தனையை நாம் எதிர்ப்பார்க்க முடியும்.

அதே போல் மதவழி சைவத்திலிருந்து - வைணவத்திலிருந்து தமிழை விரும்பத் தொடங்கியவர்கள். இன்றைக்கு எல்லாக் கோட்பாடும் இந்து மதத்திற்குள் இருப்பதாய் மயங்கி, என்ன இருந்தாலும் "துலுங்கன்களெல்லாம் மாட்டு மூளைக்காரன்கள் - அவன்களுக்கு அறிவே இல்லை" என்பதாக இசுலாமியர்களைக் கொச்சைப்படுத்தி மறுப்பதோடு - அவர்களெல்லாம் எங்காவது ஒழிந்துபோனால்கூட நல்லது என்பதாகவே இந்த சைவ, திருமாலியத் தமிழர்கள் கருதுவதை நீயும் அறிவாய்.

இவர்களைப் போலவே குறைபார்வையுடையவர்களாகவே திராவிட மாயைக்குட்பட்டவர்களும் இருக்கின்றனர் என்பது குறித்து நாம் நிறைய பேசியிருக்கிறோம் - இல்லையா.

முதலில் திராவிடத்திலிருந்துதான் தமிழ், பிரிந்து வந்ததாக இன்னமும் பலர் கருதிக் கொண்டிருப்பதை நீயும் அறிவாய்.

எப்படி தொலைக்காட்சி என்பதை 'அவாள்கள்' எல்லாம் 'தூர்தர்ஷன்' - என்பதோடு - அதையே நடைமுறைப்படுத்தவும் செய்கின்றனரோ அப்படியே தமிழ் - தமிழம் - என்பதையே ஆரியப் பார்ப்பனியம் 'திராவிடம்' எனத் திரித்து வழங்கிய வரலாற்றுச் செய்தியை அவர்கள் விளங்கிக் கொள்ளாமல் இருக்கின்றனர்.

'திராவிடம்' - என்பதே ஆரிய வழக்கு. திராவிட இனம் என்ற ஓர் இனம் இல்லை. தமிழினமே - திராவிட இனமாகத் திரித்துச் சொல்லப் பெற்றதை நாம் அறிவோம்.

ஆனால் இன்னும் எத்தனைப்பேர் திராவிடம் என்றொரு இனம் இருந்ததாகவும் அதிலிருந்துதான் தமிழும், தெலுங்கும்., கன்னடமும், மலையாளமும் பிறந்ததாகவும் - தமிழ்தான் முதலில் பிறந்ததாகவும் கதைபேசிக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? இத்தகையவர்கள்தாம் தமிழின் தாயான திராவிடத்தை நாம் மறுக்கலாமா என்கிற அளவில் திராவிடத்தின்மீது ஆறாக் காதல் கொண்டு அலைகின்றனர்.

திராவிடம் பற்றிய சொல் வரலாறு இப்படி இருக்க - தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகள் என்பவை தமிழில் சமஸ்கிருத கலப்பினால் உருவெடுத்த மொழிகள் - என்பதையும், அவைத் தனித்தனி மொழிகளாகத் திரிவுற்றன என்பதோடு அல்லாமல் அம்மொழிகளுக்கோர் தனி இனமாக இன்றைக்கு அவர்கள் வளர்ந்தும் விட்டிருக்கின்றனர் என்கிற உண்மையையும் வெளிப்படையாக அனைவரும் எளிதே உணரவேண்டியதும் கட்டாயமாகும்.

அவ்வகையில் இன்றைக்குத் தனித்தேசிய இனமாக வளர்ந்து விட்டவர்களே அண்டைத் தேசிய மக்களான தெலுங்கரும், கன்னடரும் மலையாளியரும் ஆவர்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் இவர்களை எல்லாம் இணைத்த 'மொழிக்குடும்பம் 'திராவிடம்' - என்பதாகச் சுட்டிக்காட்டிப் பயன்படுத்துவது போதாதென்று 'திராவிடர்' என்பதையும் ஓர் தனித்த இனமாகவே எண்ணி மயங்குவது எவ்வளவு பெரிய அறியாமை கொண்டது.

நிலை இவ்வாறிருக்க இங்கு தமிழகத்தில் நம் தமிழ்த்தேசிய அணிதிரட்டலில் நடந்துகொண்டிருக்கும் இருபெரும் தவறுகளை விரிவாகவே நாம் இதற்குமுன் பேசியிருக்கிறோம்.

ஒன்று - தமிழகத்தில் உள்ள தெலுங்கர்கள் மட்டுமே மண்பறிப்பு செய்து கொண்டிருப்பதாகவும், வேலைவாய்ப்பைப் பறித்துக்கொள்வதாகவும் கூறித் தெலுங்கர்கள், கன்னட, மலையாளி போன்ற பிற மொழியினர்களை எதிரிகளாக்கி விரட்டிவிட வேண்டும் என்கிற பெருந்தவறு.

மற்றொன்று மேற்சொன்ன வேற்று மொழியினரை யெல்லாம் தமிழர்கள் தாம் எனக் கட்டாயப்படுத்திச் சிந்திக்க வைக்கிற இன்னொரு பெருந்தவறு.

இவ்விரு தவறுகளும் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

மேலோட்டமாகப் பார்க்கையில் இவ்வாறு தவறுகளும் நேரெதிரானவை போன்ற தோற்றமளித்தாலும், இதன் விளைவுகளைப் பொருத்த அளவில் இரண்டும் ஒரே வகைப்பட்ட எதிர்விளைவுகளையே ஏற்படுத்தியிருக்கின்றன.

தெலுங்கர்களையும், பிறமொழியினரையும் தங்கள் தங்கள் அளவில் தனித்தனியாக அணிதிரள வைக்கிற தூண்டல்களையே இவ்விரு தவறுகளும் உருவாக்கி விட்டிருக்கின்றன.

தமிழகத்தில் தெற்கு, மேற்கு, மைய மாவட்டங்களில் உள்ள தெலுங்கு ஆதிக்கச் சாதியரும், அதே பகுதியிலும் பிற பகுதிகளிலும் உள்ள தெலுங்கு ஒடுக்கப்பட்ட சாதியரும் தங்களுக்குள் தெலுங்கர் என்பதான தனித்த அடையாளங்களைக் கொண்டிருக்கவில்லை.

அவர்கள் அந்தந்த சாதியின் ஆதிக்கப் பண்பை போலவோ, அல்லது ஒடுக்கப்பட்ட வாழ்முறையையோதான் கொண்டிருக்கின்றனர்.

இருப்பினும் - தமிழக எல்லையோரப் பகுதிகளிலிருக்கும் ஆதிக்கச் சாதியத் தெலுங்கர்கள் தங்கள் ஆதிக்க நலனையொட்டி தமிழகத்தில் உள்ள மேற்குறிப்பிட்ட அனைவரையும் தெலுங்கர்களாகச் சுட்டி ஒருங்கிணைக்கிற முயற்சியையே செய்கின்றனர்.

இதற்குப் பெருந்துணையாக இருப்பவர்கள் ஆட்சியாளர்கள்.

ஜெயலலிதா தன் ஆட்சியில் 15 விழுக்காடு சிறுபான்மையர் உள்ள பகுதிகளில் அம்மொழியை ஆட்சி மொழியாக்கலாம் என்பதாக ஆணை பிறப்பிக்கத் தொடங்கினார் என்றால் - கருணாநிதி தெலுங்கர்களையும் பிற, மொழிச்சிறுபான்மையரையும் தூண்டிவிட்டு - தமிழ்த்தேசியத்திற்கு முட்டுக்கட்டை வைப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்.

எப்படி அசாமியச் சிக்கலை ஒடுக்குவதற்கு போட்டோ - சிக்கலை அரசே தூண்டி வளர்த்ததோ, அதுபோல் - ஒரு தேசிய எழுச்சியை ஒடுக்க சிறுபான்மையரைத் தூண்டிவிடுவது என்பது ஆட்சியாளர்க்கான சாணக்கிய சூத்திரம் என்பதை நீயும் அறிவாய்.

ஆட்சியரின் இத்தகைய தந்திரத்தை நாம் எப்படி முறியடிப்பது என்று நுணுகி ஆய்வு செய்யாமல் - நாமும் உணர்வு வயப்பட்டு தெலுங்கர், கன்னடர், பிற இனத்தினரையெல்லாம் விரட்டி அடிப்பது என்பது எந்த வகையில் சரியானது. அதேபோல் அவர்களை விரட்டக் கூடாது. அவர்களெல்லாம் தமிழர்கள்தாம் என்று கட்டாயப்படுத்துவது என்பதும் எந்த வகையிலும் சரியானதில்லை.

இவ்விரு அணுகுமுறையால் வரும் பிளவுகள்யாவும் அரசுக்கு மிகவும் ஆக்க வழிப்பட்டவை தெலுங்கர்களையும் பிறரையும் எளிதே தூண்டிவிட அரசுக்கும், பார்ப்பனிய ஆளுமையர்க்கும் இது பெரும் வாய்ப்புடையது.

அண்மையில் சென்னையில் கூடிய திராவிட தெலுங்கர் ஒருங்கிணைப்பை வாழ்த்தி வழி அனுப்பி வைத்தவர் சங்கராச்சாரி என்பதை நாம் மறந்துவிட முடியாதல்லவா.

ஆனால் - தெலுங்கர்கள் திராவிடர் - என்கிற போர்வைக்குள் வந்துவிட்டார்கள் என்று திராவிடர் கழகங்கள் உச்சி முகர்வதும், அந்நிகழ்ச்சிக்கு ஆதரவளிக்க திராவிடர் நிதிநிறுவனப் பொறுப்பாளர் ஓய்வுபெற்ற நீதிபதி வேணுகோபால் சென்று கலந்து கொள்வதும் எவ்வளவு பெரிய ஏமாளித்தனமானது.

அதேபோது 'குணா'விய ஆதரவாளர்கள் இதைப் பயன்படுத்தி - 'பார்த்தீர்களா நாங்கள் எவ்வளவு சொன்னோம் - இன்றைக்குத் தமிழ்த்தெருவில் தெலுங்கில் சொற்பொழிவு செய்கிற நிலை வந்திருக்கிறது' - எனவே தெலுங்கர்கள்தாம் எதிரி என்கிற வகையில் அவர்கள் தங்களின் குறை பார்வையைப் பரப்புவது எவ்வளவு கேடாக அமைந்து வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

தேசிய இனமக்களை ஒடுக்குகிற இந்திய அரசுக் கட்டமைப்பு - அதைத் தாங்கிப் பிடிக்கிற இந்தியப் பார்ப்பனியம் எதிரியாய் வெளிப்பட்டு நிற்க அதை எதிர்த்துப் போராடுவதை விடுத்துத் தெலுங்கரும், பிறமும் எதிரி என்று சுட்டிக்காட்டுவது யாரை வலுப்படுத்தக் கூடியது என்பதை நீ அறியாய்.

தெலுங்குத் தேசிய மக்களும், தமிழ்த்தேச மக்களும் மோதிக்கொள்வது தில்லிக்கு ஏதும் பாதிப்புடையது அல்ல என்பது மட்டுமல்ல - தில்லிப் பார்ப்பனியத்தை வாழ்விப்பதே ஆகுமல்லவா.

தமிழர் - என வகைப்படுத்துவது மொழியால் மட்டுமல்ல. தமிழர் அடிமைப்படுத்தப்பட்டிருப்பது மொழி, பண்பாடு, அரசியல், வரலாற்றுப் பொருளியல் அடித்தளங்களோடு இருந்திருமானால் தமிழர் - எனப் பொதுப்பட நாம் அழைப்பதற்குள் தெலுங்கரும் வந்தடங்கலாம்.

ஆனால், இக்கால் தமிழன் என்று நாம் கூறுவதே மொழியால் உணரப்பட்ட நிலையிலேயே இருக்கையில் அதற்குள் தெலுங்கரை உள்ளடக்க முடியாதல்லவா.

கருத்தளவில் தமிழ்த்தேசியர்களாக, தமிழக மக்களாக இங்குள்ள மொழிச் சிறுபான்மை மக்களை உணரவைக்கிற முயற்சியிலேயே தமிழ்த்தேசிய எழுச்சிக்குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கும்.

அம்முழக்கமே தமிழ்த்தேசிய எழுச்சிக்கான தடைகளை உடைத்தெரியும்.

மொழிவழியில் மட்டும் அவர்களைத் தமிழர்கள் எனப் புரியவைக்கிற முயற்சி எதிர்விளைவையே தரும். குறிப்பாகத் தாங்கள் தமிழர் இல்லை என்பது மட்டுமல்லாமல். தமிழ்த்தேசியம் தங்களுடையது இல்லை என்றான கருத்தையே கொடுக்கும்.

தாங்கள் தமிழ்த்தேசியர்கள் இல்லை என்றான பிறகு தாங்கள் தெலுங்கர்கள் என்கிற மொழி உணர்ச்சியே மேலோங்கித் தங்களுக்கான சிறுதேசிய உரிமைக் கோரிக்கைக்கு இட்டுச் செல்லும்.

தேசியத்திற்குள் தேசியம் என்கிற வகையில் இந்தியப் பார்ப்பனியத்துக்கே அது ஆக்கத்தைக் கொடுக்கும்.

தோழனே இவைகுறித்தெல்லாம் இன்னும் விளக்கமாய் விளங்க வேண்டுவது நமது பெருங்கடமை என்பதை நீ இப்போது நன்கு உணர்வாய் என்றெண்ணுகிறேன்.

அவ்விளக்கத்திற்காகத் தமிழக அளவில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அனைவரும் இதுகுறித்துக் கலந்து பேசுவதே சிறந்தது என நான் கருதுகிறேன்.

அமைப்புகள் சில நோக்கங்களில் வேறுபட்டிருப்பினும் - அடிப்படை தமிழ்த்தேசிய விடுதலையாக - புரட்சிக்கான நோக்கமாக இருப்பதினால் - சிக்கல்களை முழுமையாய் உணர்ந்து கொண்டு அணுகுவதற்கு அனைவரும் கலந்து பேசுவதே சாலச் சிறந்தது.

அத்தகைய அமர்வுக்கு அனைவரையும் அழைப்பது நம் கடமை என்றே நாம் உணர்வோம் இல்லையா.

**அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக்கு,**
**அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக் ... அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக்கு,**
**அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனு ... அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக்கு,**
**அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக் ... அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக்கு,**
**அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக்கு, அன்புத் தோழனுக்கு,**

தோழமையுடன்

**வேட்பன்**

# திருக்குறளை இயற்றியவர் 'ஆச்சார குந்தகுந்தராம்!'

குமரி மாவட்டத்தில் திருவள்ளுவரை திருத்துவதற்கும் அடக்குவதற்கும் (கிருத்துவ சமயத்தில் சார்ந்தவர் என்று பொய்க்கருத்துப் பரப்ப செய்கின்றனர் என்றால், வடமாவட்டத்தில் குறிப்பாக வந்தவாசி பகுதியில் உள்ள பொன்னூரி மலையில் திருக்குறள் இயற்றியவர் திருவள்ளுவர் இல்லை என்பதோடு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உருவத்தையும் மறுக்கிறார்கள். திருக்குறளை இயற்றியவரை சமணர் என்றும், அவர்பெயர் ஆச்சாரிய குந்தகுந்து என்றும், கருத்துப் பரப்பல்' செய்கிறார்கள்.

வடதமிழகத்தில் சிறுபான்மையினராக உள்ள சைவ வேளாளராயிருந்து மதம் மாறிய வணூவு நயினார்களான சமணர்கள் தீண்டாமை, பூணூல், பார்ப்பன மதக்கடவுளர்களை வைத்துக்கொண்டு சாதிவெறிப்பிடித்தவர்களாகவும், வடநாட்டு மார்வாரி பணியாக்களின் உறவினர் போன்றும் வட்டித்தொழிலாளராகவும், நிலவுடைமையாளர் களாகவும் முதலாளிய ஆளுமைச் சிந்தனை உடையவர்களாகவும், தமிழில் அர்ச்சனையை எதிர்ப்பவர்களாகவும் உள்ள இவர்களின் இத்தகைய போக்கு தமிழிய உணர்வினை எந்த அளவு கீழ்மைப்படுத்துவது.

திருவள்ளுவரை நாம் பயிலாததாலும், ஏற்காததாலும் வருகிற கேடே இவை.

வந்தவாசியில் இயக்கிவரும் திருவள்ளுவர் பழந்தமிழர் கழகம் இத்தகைய கருத்துக்கெதிராக இயக்கம் அமைத்துச் செயல்பட்டு வருகின்றது.

www.padippakam.com

# இன்று பாராளுமன்றம்;

பொத்தற் குடத்தில் தண்ணீர் ஊற்றினால் நிற்குமா; வெந்நீர் ஊற்றினால் நிற்குமா என்ற வினாவுக்குள் விழுந்து இந்திய அரசியல் நோக்கர்கள் இருகூறாய் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் மறந்தது அல்லது மறைக்கப்பார்ப்பது குடம் பொத்தல் என்பதையே. இனியும் இந்தப் பாராளுமன்ற அமைப்பை வைத்துக் கொண்டு 'நிலையான' ஆட்சியைத் தரமுடியும் என்பது கற்பனையே. அதே நேரத்தில் நாம் இன்னொன்றையும் மறந்துவிடக் கூடாது. கட்சிகளால் நிலையான ஆட்சியைத் தரமுடியாதேயொழிய இந்தியப் பேரரசின் நிருவாக அமைப்பு நிலையானதான கொடுநெறி அமைப்பாக உள்ளது என்பதே அது. இந்த அரசியல்காரர்களினால் இந் தியாவை ஆள முடியாவிட்டாலும் அதிகாரிகள் ஆண்டு கொள்வார்கள் என்பதுதான் இதன் விளக்கம். அடிக்கடி தேர்தல் வருவது நாட்டுக்கு நல்லதல்ல என்று குடும்ப நலப் பரப்புரையில் (அடிக்கடி பிள்ளைப்பேறு; அன்னையின் நலத்துக்குக் கேடு) கூறுவதுபோல் எப்போதும்போல் முன்னணியில் நிற்கிறது தி.மு.க. இவர்கள் எவ்வளவுதான் வருந்தினாலும் நிலையான பாராளுமன்றம் இனி அமைக்கப்பட முடியாது என்றே தோன்றுகிறது.

'ஆரிய வர்த்தத்'திற்கு அப்பால் உள்ள தேசிய இன மக்களின் எழுச்சியே இதற்கெல்லாம் காரணம். ஆரியவர்த்தத்தில் மட்டுமே பா. ச.க.வா பேராயமா என்ற நிலை உள்ளது. அதற்கு வெளியே அந்தந்த தேசிய இன மக்களின் உரிமை வேட்கை அந்தந்த தேசங்களுக்குள் செயல்படும் கட்சி களுக்குச் சார்பாகவே இருக்கிறது. ஐம்பதாண்டு இந்திய ஆட்சியினால் புறக்கணிக்கப்பட்டுவரும் அந்த மக்களின் தேசிய உணர்ச்சி தேச விடுதலை என்ற நிலையை அடையவில்லை என்றபோதிலும் - அவர்கள் ஆதரிக்கின்ற அவர்களின் சொந்த தேசிய கட்சிகளும் 'இந்தியத்தைக்' கட்டிக்காக்கிற தன்மை கொண்டவையே என்றபோதிலும் - அவர்களின் அடிமன அவா இன்னதென பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. அது நாளை தேசிய இன விடுதலைப் போராக முதிர்வடையும். அப்போது நிலையான இந்திய நிருவாக அமைப்பும் வீழ்த்தப்படும். இன்று பாராளுமன்றம். இறுதியில் அதிகாரக் கட்டமைப்பு. இதில் நாம் வருத்தப்பட என்ன இருக்கிறது?

இந்தியாவை ஆள எங்களுக்கே உரிமை உள்ளதென்று கட்டிக்கொண்டு நிற்கும் பா.ச.க., பேராயம் இவற்றுக்கிடையில் நாம் என்ன வேறுபாட்டைக் கண்டுவிட முடியும்? பேராயம் மதச்சார்பின்மைக் கோட்பாட்டைக் கைக் கொள்ளும் என்பதற்கு எங்கேனும் ஒரு சான்றாவது உண்டா? அல்லது பா.ச.க. சுதேசிப் பொருளியலைத் தாங்கிப் பிடித்து உலக மயமாக்கலை ஓட ஓட விரட்டியது என்பதற் காவது சான்று உள்ளதா? இரண்டுமே இரண்டு கட்சிக்குமேயான முகமுடிகளே.

பா.ச.க. இந்துத்துவத்தின் ஏமான் (எசமான்) என்றால் பேராயம் இந்துத்துவத்தின் எடுபிடி என்று வேண்டுமானால் வேறுபடுத்தலாம். பேராயம் தரகுமுதலாளிகளின் செல்லப்பிள்ளை என்று சொன்னால் பா.ச.க. எஞ்சியுள்ள இந்தியப் பெருமுதலாளிகளையும் தரகு முதலாளிகளாக மாற்ற விழையும் தாய் என்று சொல்லலாம். வளங்கொழிக்கும் ஆப்பிரிக்க நாடுகளில் இந்திய முதலாளிகளின் தடையற்ற சுரண்டலுக்குத் தாராள மயமாக்கம் எந்த அளவு உதவி செய்யும் என்று கணக்கிடுவதில் இரண்டு கட்சிகளும் ஒன்றே.

சார்க் அமைப்பு என்ற பெயரில் இந்திய மேலாண்மையை இத்துணைக் கண்டப்பகுதியில் நிறுவ பேராயம் முயன்றதென்றால் 'பொக்ரான்' வெடிப்பு மூலம் அண்டை நாடுகளை மிரட்டவும் பணிய வைக்கவும் பா.ச.க. முனைந்தது. 'நல்லெண் ணப் பயணங்கள்' எவரின் நலத்திற்கென்று 'அமைதி படை'யைக் கண்ட நமக்குப் புரியாதா என்ன?

'இராமன் ஆண்டால் என்ன; இராவணன் ஆண்டால் என்ன' என இந்தப் பேரரசின் குடி மக்களில் ஐம்பது விழுக்காட்டினர் தேர்தலைப் புறக்கணிக்கின்றனர்.

அதற்குக் காரணம் இராமன் என்பதும் இரா வணன் என்பதும் ஒரே ஆளின் இரு புனைவுகளே என்பதை உணர்ந்ததே. இவர்களில் எவரையும் 'ஊழலை எதிர்க்க' என்றும் 'மதவாதத்தை மாய்க்க' என்றும் சுமந்துவரும் தமிழ்த்தேசத்திலுள்ள பல்லக்குத் தூக்கிகளிடமும் எச்சரிக்கையாக இருப்போம். இந்தியத்தின் வீழ்ச்சியில் தமிழ்த் தேசியம் மலரட்டும்.

## நாளை இந்தியா.

- தமிழ்முகிலன், பாளையங்கோட்டை

www.padippakam.com

## மாதர் பாக்கம் அரசு பள்ளியில் கல்விக் கட்டணம் பறிப்பு! தடுத்து நிறுத்தியது த.ஓ.வி.இ.

பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் வழி கல்விக் கட்டணம் பெறுவது என்பதாகச் சொல்லி கும்மிடிப்பூண்டி வட்டம் - மாதர்பாக்க அரசுமேனிலைப் பள்ளியில் ஏழை மாணவர்களிடையே கொள்ளை அடிக்கின்றது பள்ளி நிர்வாகம்.

அதைக் கண்டித்துத் தஓ.வி.இ. தோழர்கள் பள்ளி நிர்வாகத்திடம் வரதிட்டும், பின்னர் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்துக் கண்டனம் தெரிவித்தும் போராடவே, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மட்டும் கட்டணம் கட்டத் தேவையில்லை என்பதாக ஓர் ஆணையைப் பெறமுடிந்தது.

த.ஓ.வி.இ. தோழர்களின் உறுதியான போராட்டம் குறித்து பள்ளி மாணவர்கள் மகிழ்ச்சியுற்றனர்.

**மரண தண்டனை ஒழிப்பு மனித உரிமைக் காப்பு -**

தமிழக அளவிலான பரப்புரை நிகழ்ச்சிகளில் த.ஓ.வி.இ. யும் பங்கேற்றது.

* திருப்பத்தூரில் தோழர் சிவா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசியதோடு, நிகழ்ச்சி அமைப்புக்கான அனைத்து நிலைகளிலும் துணை நின்று செயலாற்றினார்.
* ஈரோட்டில் த.ஓ.வி.இ. தோழர்கள் முன்னெடுத்து ஈரோடு - கருங்கல் பாளையத்தில் நிகழ்ச்சியைச் சிறப்புற நடத்தினர். தோழர் பூபதி - பரப்புரைக்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினார்.

# தமிழ் தமிழர் இயக்கம் தமிழ்த்தேச மூன்றாம் மாநாடு

கடந்த சூலை - 11 அன்று, தமிழ், தமிழர் இயக்க மூன்றாம் மாநாடு சென்னை அம்பத்தூரில் 'மொழியுரிமை - இனவுரிமை மீட்பு மாநாடாக' நடைபெற்றது. பொது மாநாட்டிற்குமுன் அம்பேத்கர் சிலையிலிருந்து அம்பத்தூர் பேருந்து நிலையம்வரை பேரணி நடைபெற்றது. பொதுமாநாட்டில் பெ. மணியரசன் (த.தே.பொ.க) தமிழேந்தி (ம.பெ.பொ.க) இளங்கோவன் (த.ஓ.வி.இ) மற்றும் பலர் உரையாற்றினர். செ.வேலுச்சாமி தலைமை யேற்றார். சு.ப.வீ. தீர்மான விளக்கஉரை ஆற்றினார். தியாகு நிறைவுரையாற்றினார். மாநாட்டில் கீழ்க்காணும் தீர்மானங்கள் உள்ளிட்ட 20 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்**

காசுமீர் மக்களின் பிறப்பு உரிமையாகிய பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை, இந்திய, பாகிஸ்தான் அரசுகள் தொடர்ந்து மறுத்து வருகின்றன. காசுமீர் மக்கள் மீது அப்பட்டமான இராணுவ அடக்குமுறையை இந்திய அரசு ஏவியிருப்பதன் தொடர்ச்சியாகவே கார்கில் சிக்கல் உருவாகி உள்ளது. இந்திய அரசும், பாக்கிஸ்தான் அரசும் தத்தமது ஆக்கிரமிப்பில் உள்ள காசுமீரப் பகுதிகளிலிருந்து படைகளை விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும், பொதுசன வாக்கெடுப்பின் வாயிலாக காசுமீர மக்கள் தாங்களே தங்கள் எதிர்காலத்தை உறுதி செய்து கொள்ள ஆவன செய்ய வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

2. தமிழ்த்தேசம் தில்லி வல்லாதிக்கத்துக்கு அடிமையுற்றிருக்கும் நிலையில் இந்திய நாடாளுமன்ற மக்களவைக்கு வரவிருக்கும் தேர்தல் என்பது மீண்டும் ஒரு மோசடியே தவிர வேறன்று. இத்தேர்தலில் போட்டியிடுவதும், அதற்கென சந்தர்ப்பவாதக் கூட்டணிகள் அமைப்பதும் தமிழ்த் தேசத்தைச் சூழ்ந்துள்ள சிக்கல்களுக்கு எவ்வகையிலும் தீர்வாகாது. இந்துத்துவ எதிர்ப்பு, ஊழல் எதிர்ப்பு என்றெல்லாம் இந்த நாற்காலி வேட்டைக்கு நாமகரணம் சூட்டுவது ஏமாற்றும் செயலே ஆகும். சந்தர்ப்பவாத பதவி வேட்டை அரசியலுக்குப் பாடம் புகட்டும் விதத்திலும் தமிழ்த் தேசியத்துக்கும் சமூக நீதிக்குமான போராட்ட அரசியலுக்கு வலுவூட்டும் விதத்திலும் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் எவருக்கும் வாக்களிக்காமல் புறக்கணிக்கும்படி தமிழக மக்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

11. தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான காவல்துறை அடக்குமுறையும் சாதி ஆதிக்க வன்கொடுமைகளும் ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகின்றன. மேலவளவுப் படுகொலைக் குற்றவாளிகளில் முதன்மையானவர்களை இதுவரை கைது செய்யக் கூட இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் சனநாயக உரிமைகள் நசுக்கப்படுகின்றன. இந்நிலை மாற தாழ்த்தப்பட்ட மக்களோடு இணைந்து போராட அனைத்துச் சனநாயக, சமூகநீதி சக்திகளும் முன்வருமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டுமென்று சாதி ஆதிக்க வெறியர்கள் எழுப்பிவரும் கூச்சலை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு, வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தை மேலும் தீவிரமாகச் செயல்படுத்தும்படி அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

www.padippakam.com

மூடு!

நிலைக்கவில்லை, உன்
'நிலையான ஆட்சி'...
உட்கார்ந்து பேளுவதற்கு
முட்டி இல்லை உனக்கு,
நீ பேசாதே,
நிலையானதைப்பற்றி...

வெளிக்கி எடுக்கவா
வெள்ளிப் பாத்திரம்? உன்
சமஸ்கிருத
சாய்க்கடைக்கு
சந்தனப்பூச்சு... எம்

நிலைமொழியை
'நீசமொழி' என்று
நக்கலடித்த நாக்கே
நீ பேசாதே, எம்
மொழியைப்பற்றி...

கோவை எங்கும்
கொலைவெறி ஆட்டம்
ஒரிசா மண்ணில்
காமவெறி ஆட்டம்
பாதிரியைக் கொன்று
மதவெறி ஆட்டம்

நாளுக்கொரு
பாரதக் கூத்தை
கட்டவிழ்த்த, பார்ப்பன
கம்மனாட்டி
நீ பேசாதே
அமைதியைப்பற்றி...

சோற்றை எடுத்து
சூத்தில் திணிக்கும்
சுதந்திர இந்தியாவின்
தேர்தல் கட்டளை...

மண்டல் கமிசனின்
செயல்முறைக்காய்
ஆரிய வெறியின்
அறுவுதொறவோடு
ஆட்சியைக் கவிழ்த்த
நீ பேசாதே, தேர்தல்
திணிப்பைப்பற்றி...

'சோனியா' என்னும்
ஆந்தை மூஞ்சி
அசலூர்க் காரி
ஆளத்துடிப்பதாய்

# கொதேலை வாயில் கொழுக்கட்டை

## ஒப்பாரி

பிழைப்புக்காக இங்குவந்த
பிணக்கூட்டமே...
வந்தேறிகளின்
வாரிசே... நீ
பேசாதே, எமை
ஆள்வதைப்பற்றி...

அணுக்குண்டு
அட்டகாசம்...
அலுப்பற்ற
இந்திய வெறியாட்டம்...
பரம்பரையாய்
சுரண்டிக் கொழுக்கும்
முடிந்த மயிருள்ள
முட்டைப்பூச்சி...
நீ பேசாதே
ஊழலைப்பற்றி...

நெருப்போடு,
உயிரோடு போராடி
உலர்ந்திட்ட
உலகறியா பிஞ்சுகள்...
வாஜ்பாய் பயலின்
கொதலை வாயில்
கொழுக்கட்டை?
நீ பேசாதே
நேர்மையைப்பற்றி...

இனியும் பேசாதே...
வாயை மூடு
பி.ஜே.பியின்
பீ நாக்கே... மூடு!
நீ,
ஆர்.எஸ்.எஸின்
அரசியல் குளோனிங்...

திருட்டுப்பயல்
திலகரின் குலத்தில்
ஊறிய மட்டை...
கோட்சேயின்
கொடை...
பார்ப்பன கும்பலின்
படைத்தளம்...

இனியும் பேசாதே
செத்த உன்வாயின்
செவடால் போதும்
மூடு...


படிப்பகம்

www.padippakam.com

எல்லோரும் பாரத மாதாவின் குழந்தைகளாம். வெட்கங் கெட்டுப் பேசுகின்றார்கள் இந்துப் பார்ப்பனிய வெறியர்கள்.

எல்லாரும் பாரதமாதாவின் குழந்தைகள் என்றால் ஏன் ஒரு குழந்தை மட்டும் பூணூல்போட்டுக் கொள்கிறது? ஏன் அக்ரகார மக்கள் ஊர் மக்கள் — சேரிமக்கள் என்கிற பிரிவினை?

பாரததேசம் என்று பெருமை கொள்வோம் என்கின்றன இந்தியப் பார்ப்பனிய வெறியர்கள்.

காவிரிச் சிக்கலா — தமிழகத்தில் ஒரு பேச்சு கருநாடகாவில் வேறொரு பேச்சு...

கருநாடகாவில் தமிழன் அடிபடுகையில் தூங்குகின்றது பாரதமாதாவின் பெருமை!

திருவள்ளுவருக்குக் கருநாடகாவில் சிலைவைக்க முடியாது. இதுதான் பாரத மாதா என்கிற பெருமை!

"எல்லை மீறிய சிங்கள நாட்டின் படையினரால் சுட்டுக் கொல்லப்படும் தமிழ் மீனவனைப் பற்றிக் கவலைப்பட மாட்டோம். ஆனால் காஷ்மீரத்தில் உரிமைக்குப் போராடும் காஷ்மீரிகள், காஷ்மீரப் பார்ப்பனர் களைத் தாக்கும்போது மட்டும் பாரததேச உணர்வு எங்களுக்குப் பொங்கி வழியும்! - இதுதான் பாரத மாதாவின் பெருமை.

பாரதத்தின் அனைத்து மொழிகளும் 'தேசிய' மொழிகள் என்போம் - என்று கொக்கரிக்கின்றன பார்ப்பனக் குடுமிகள்.

- ஆனால் இந்தி மட்டுமே ஆட்சிமொழி, தேசிய மொழி.

சமஸ்கிருதம்தான் தேவபாஷை

எனவே 1500 — பேர்மட்டுமே பேசும் சமஸ்கிருத பாஷையில் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்போம்! - கோயில்களில் 'அர்ச்சனை' மொழியாக வேறு எந்தமொழியும் பயன்படுத்தக் கூடாது. அவையெல்லாம் தேவ்டியாள் மக்கள் மொழி. சமஸ்கிருதம் தான் தேவபாஷை — என்கின்றன பார்ப்பனக் குடுமிகள்.

தொலைக்காட்சியைத் 'தூர்தர்ஷன்' என்பது, வானொலியை 'ஆகாஷவாணி' - என்பது மட்டுமல்ல, அவற்றின் ஒலிப்பரப்புகளிலெல்லாம் சமஸ்கிருதத்தை தேவபாஷை—என்று கூறுவதோடு சமஸ்கிருதத்திலேயே செய்தி வாசிக்கிற கொடுமையை என்னவென்பது.

இந்தக் குடுமிகளின் சமஸ்கிருத வெறி கொஞ்சநஞ்ச மல்ல.

நம் மொழியை இழிமொழி என்கிறது பார்ப்பனிய வெறிமொழி சமஸ்கிருதம்.

நம் மக்களைச் சாதியில் பிரித்து ஒதுக்குகிறது பார்ப்பனிய வெறிபிடித்த சமஸ்கிருத ஆதிக்கம்.

இத்தகைய ஆதிக்கமொழி இந்தியாவின் தேசிய மொழிகளில் ஒன்றாம்.

எப்படி நாம் ஏற்க முடியும்.

இந்தியாவில் உள்ள எந்த தேசிய மக்களாலும் சமஸ்கிருதம் பேசப்படாத போது அதைத் தேசியமொழி என்று ஏற்க இயலாது.

அதை ஏற்க இயலாது என்பது மட்டுமல்ல — சமஸ்கிருத வளர்ச்சிக்கென ஆண்டொன்றுக்கு ஒதுக்கப்படும் ஆயிரம் கோடி பணத்தையும் நாம் அனுமதிக்க முடியாது.

இந்தியாவில் மக்கள் வழக்கில் உள்ள எந்த மொழி களிலும் தில்லியிலிருந்து செய்தி வாசிக்கப்படாததைக் கண்டிப்பதோடு, சமஸ்கிருதத்தில் மட்டும் செய்திகள் வாசிக்கப்படுவதை நாம் தடை செய்தாகவும் வேண்டும்.

கோயிலில் சமஸ்கிருத வழிபாட்டை எந்த வகையிலும் நாம் ஏற்க முடியாது. சமஸ்கிருத வழிபாட்டை ஒழித்தாக வேண்டி இருக்கிறது.

இத்தகைய நோக்கங்களிலேயே வரும் செப். 17 — அன்று — ஆரியப் பார்ப்பனியத்தை இரும்புலக்கை மொத்துதல் போல் எடுக்காமல் அடித்த தந்தை பெரியாரின் பிறந்த நாளன்று...

சென்னையில் — முழுநாள் தொடர் முழக்கப் போராட்டம் செய்ய முடிவெடுத்திருக்கிறது தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்.

இது ஒடுக்கப்பட்ட தமிழக மக்களின் உரிமை முழக்கம் — உரிமைப் போராட்டம்!

எனவே அனைவரையும் ஒருங்கிணைந்து போராட அழைக்கிறது த.ஒ.வி.இ.

- ★ ஆதிக்க சமஸ்கிருதத்தைத் 'தேசிய' மொழிகளின் பட்டியலிலிருந்து நீக்கு...
- ★ தொலைக்காட்சியில் வானொலியில் சமஸ்கிருத செய்திவாசிப்பை நிறுத்து...
- ★ சமஸ்கிருதத்தையும், பார்ப்பனரையும் கோயில் கருவறையிலிருந்து வெளியேற்று...

சாதி-மத-பார்ப்பனிய வெறியை வளர்த்திடும் சமஸ்கிருத ஆதிக்கத்தை எதிர்த்து

## தொடர் முழக்கப் போராட்டம்!

சென்னையில் செப்-17 அன்று
காலை 10.00 மணிமுதல்

## கொலை வெறி ஆட்சி

கடந்த 25.7.99 அன்று நெல்லை - பழவூரைச் சேர்ந்த ஆறுமுகத்தின் வீட்டில் புகுந்து தாக்கி அவர்மீது பொய்வழக்கு போட்டிருக்கிறது போலீசு.

பழவூர் மக்கள் மீதான போலீசின் அத்து மீறலைக் கண்டித்தார். பழவூர் காவல்நிலையத்தில் அடித்துக் கொல்லப்பட்ட முத்துவின் மரணத்தைக் கோட்டாச்சியர் விசாரணைக்கு கொண்டுவந்து போலீஸ் ரௌடி ஜூலியஸ் சீசரை கொலையாளியாக அம்பலப்படுத்தினர்.

இதுபோன்று மக்களுக்கு ஆதரவாய் நின்று போராடிய காரணத்தால் இவர் போலீசு குண்டர் களால் தாக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட் டுள்ளார். நெல்லையைப் பொருத்தவரை போலீசின் கொலைவெறி ஆட்சிதான் நடைபெறுகிறது என்பதற்கு இதுவும் ஓர் சான்றாகும்.


படிப்பகம்

# முனை மழுங்கா வீரன் தமிழரசன்!



செவ்வணக்கக் கைதூக்கிச்
செங்கொடியை ஏந்திச்
சிரித்தமுக நெற்றியிலே
சிந்தனையைத் தேக்கி
முவ்வுரமும் எழுச்சியுற
முடுகிநடை யிட்ட
முனைமழுங்கா வீரனவன்,
தமிழரசன்! முன்னைக்
கவ்வியுள்ள இருள்போக்கக்
காளையரைக் கூட்டிக்
கடும்பகையை எதிர்த்திடவும்
கண்விழித்து நின்றான்!
வெவ்வதிகாரக் கொடுமைச்
சூழ்ச்சியினால் வீழ்ந்தான்!
விடுதலைசேர் தமிழகத்தில்
வீழ்ச்சியின்றி வாழ்வான்!

பெற்றவரை மறந்தபெறும்
வீரனவன்! பெற்ற
பெருநிலத்தைத் தாய்மொழியைப்
பேணுகின்ற நோக்கில்
உற்றதுணை யாளர்களை
உருவாக்கிச் சேர்த்தே
ஒரு புரட்சி செய்திடவே
ஊரூராய்ச் சென்றே
கற்ற கொள்கை பரப்பியவன்!
கனன்றெழுந்த போதில்
காளையவன் களத்தினிலே
கன்னி உயிர் தந்தான்!
ஒற்றர்களால் உலுத்தர்களால்
உயிர்பறிக்கப் பட்டான்!
உரிமை பெறுந் தமிழ்நாட்டில்
உயிர் வாழ்ந்து நிற்பான்.

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(செப். 1 தோழர் தமிழரசனின் வீரவணக்க நாள்!)